# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

ரஜிஸ்டர் நெ. எம். 2912



By Courtesy of " Health "

(இப்படத்தின் விபரத்தை அடுத்த இதழில் பார்க்க)

மலர் ].   உள் நாடு விலை 2 அணா.

, ஸ்ரீமுகி   வெளி நாடு விலை 2 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 NOV 1933
MADRAS

211, 33
33.1.2
190342

# எமது இனிய தமிழ்ப் பிரசுரங்கள்

## செந்தமிழ் வாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 | 2 | 6 | |
| இரண்டாம் ,, | 0 | 3 | 0 | ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார் |
| மூன்றாம் ,, | 0 | 4 | 6 | |
| நான்காம் ,, | 0 | 5 | 6 | |
| ஐந்தாம் ,, | 0 | 6 | 6 | |

## பொற்காலக் கணிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 | 5 | 0 | டி. எஸ். இராகவையர் |
| இரண்டாம் ,, | 0 | 6 | 0 | |
| மூன்றாம் ,, | 0 | 8 | 0 | |
| நான்காம் ,, | 0 | 9 | 0 | |

## இந்திய சரித்திர தீபம்

| | | | | |
|---|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 | சி. வி. நாராயண அய்யர், எம்.ஏ.எல்.டி. |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 | |

## சமூக வாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 | ஆர். இராமையர், எம். ஏ. எல். டி. |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 | |

## நவீன சுகாதார வாசகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 | கே இராஜம் அய்யங்கார், |
| 5-ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் | 0 | 5 | 0 | பி. ஏ., எல். டி., எம் ஐ எஸ். ஏ. |

## அறநெறி விளக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 | மணி. திருநாவுக்கரசு முதலியார் |
| 5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 | |
| 6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் | 0 | 7 | 0 | |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

| | | | | |
|---|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 2 | 0 | மணி திருஞானசம்பந்த முதலியார் |
| ,, அதிபத்த நாயனார் | 0 | 2 | 0 | |
| ,, வறுதிநாத நாயனார் | 0 | 3 | 0 | |
| ,, நந்தனார் | 0 | 5 | 0 | |

## நீதி நூல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2-ம் வகுப்பு உலகநீதி: | உரையும் கதைக் குறிப்பும் | 0 | 4 | 0 | வா. வெங்கடராம சாஸ்திரிகள் |
| 3-ம் ,, கொன்றை வேந்தன்: | ,, | 0 | 6 | 0 | |
| 4-ம் ,, நல்வழி: | ,, | 0 | 6 | 0 | |
| 5-ம் ,, மூதுரை: | ,, | 0 | 8 | 0 | |


நல்ல குழந்தை 3, 4-ம் வகுப்புகளுக்கு 0 3 0—மறைமலை. சிவ. முத்து


பால கோபால லீலை 4, 5-ம் வகுப்புகளுக்கு 0 4 0—அ. சுப்பிரமண்ய பாரதி

திருக்கண்ணப்பன் 5-ம் வகுப்பு 0 5 0—மணி. திருநாவுக்கரசு முதலியார்.

இந்துபாக சாஸ்திரம் 0 8 0—பி. வி. ஜகதீச ஐய்யர்.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,** திருவல்லிக்கேணி, சென்னை.





# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் .... .... | 49 |
| 2. | ஆரம்பாசிரியர்களும் பி. ஏ. பட்டதாரிகளும் | 50 |
| 3. | கோபால கிருஷ்ண கோகலேவின் ஜீவிய சரித்திரம் | 52 |
| 4. | இந்திய வர்த்தமானம் .... .... | 55 |
| 5. | ஆரம்ப பாடசாலைகள் போட்டா போட்டி .... | 56 |
| 6. | ஆரம்ப பாடசாலை ஆசிரியர் தோழன் .... | 57 |
| 7. | விட்டில் ஹெயில்ஸ் துரையவர்கள் பிரசங்கம் .... | 61 |
| 8. | ஆசிரியர் பகுதி .... .... | 62 |
| 9 | சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு .... | 65 |
| 10. | தேக சுகாதாரம் .... .... | 68 |
| 11. | பெற்றோர் சங்கம் .... | 71 |
| 12. | பெண் கல்வி .... .... | 73 |
| 13. | உலக விநோதங்கள் .... .... | 74 |
| 14. | கடவுள் வழிபாடு .... .... | 76 |
| 15. | ஆசிரியர் ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் .... | 79 |
| 16. | போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜெட் .... | 80 |
| 17. | சென்னை ஆரம்பக் கல்வி ஆக்ட் .... | 81 |



# அஸோஸியேஷன் புத்தகசாலை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை | 1 | 12 |
| அம்பலத்தரசன் .... | 1 | 8 |
| திருக்கழுக்குன்றத்துக்கொலை | 1 | 8 |
| அமிர்தகுமாரி .... .... | 1 | 4 |
| அம்பலவாணன் .... .... | 1 | 4 |
| மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம் .... | 1 | 0 |
| ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி .... .... | 1 | 0 |
| நவீன நவரத்தின இலாவணி .... | 0 | 8 |
| மிஸ்டர் திண்ணைத்தூங்கி தடிராமன் | 0 | 6 |
| கணவனின் கடமை .... | 0 | 4 |
| 18-ம் பாஷை என்னும் அபூர்வ தமிழ் ரகஸ்ய பரிபாஷை | 0 | 8 |
| வியாஸபாரத வசன சங்க்ரஹம் .... | 3 | 0 |
| குடும்பவினோதக் கதைகள் .... | 2 | 0 |
| உலகவினோதக் கதைகள் .... | 2 | 0 |
| வசீகரண தந்த்ரம் (தமிழ்ப் பதிப்பு) | 2 | 0 |
| ,, (தெலுங்கு பதிப்பு) | 2 | 0 |
| ,, (ஆங்கிலப் பதிப்பு) | 3 | 0 |
| பன்னியூர் படாடோப சர்மா | 2 | 4 |
| துரைக்கண்ணம்மாள் | 2 | 4 |
| திகம்பர சாமியார் பால்யலீலை 2பாகம்) | 5 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| இராஜேந்திரா மோகனா | 1 | 4 |
| ரமாமணி | 2 | 0 |
| ராமுலு ஸங்கீத சிந்தாமணி | 2 | 0 |
| ராமுலு திராவிட கானம் | 3 | 0 |
| ராமுலு ஸங்கீத சில்லரைக் கோர்வை | 3 | 0 |
| ராமுலு கீர்த்தன ரத்னங்கள் | 1 | 4 |

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது.
ரிஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்ட

## ஆங்கில ஆசான்

அல்லது

## ஆங்கில போதினி

இது தமிழ் நாட்டில் 3,75,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு எங்கும் பிரபல்ய மடைந்தது. இங்கிலீஷ் பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்ளக்கூடிய புத்தகம் இதுதான். 872-பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் சீமை காலிகோ பயிண்டுடன் கூடியது விலை ரூ. 2 0 0
ஷை தெலுங்கு புஸ்தகம் ரூ. 2 0 0
ஷை கன்னட புஸ்தகம் ரூ. 2 0 0

அசோஸியேஷன் புத்தகசாலை,
94-95. புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.

# "ஆரம்பக் கல்வி,"

## சந்தா விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட இந்தியா, பர்மா, சிலோன், | ரூ. | 1 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு | ,, | 2 | 0 | 0 |

ஆரம்ப பாடசாலைவைத்து பரிபாலித்துவரும் ஆசிரிய மானேஜர்களிடமும், மானேஜர்களிடமும் 1-8-0 ரூபாய் விதம் சந்தா வசூலிக்கப்படும். ஒரு ரூபாய் பத்திரிகைக்குப்போக மிகுதியுள்ள 8-அணுவில் 4-அணுவை அந்தந்த ஜில்லாவிலுள்ள ரேஞ்சுச்சங்கங்களுக்கும், மற்றொரு 4-அணுவை சென்னையிலுள்ள ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கும் சேர்த்து விடப்படும். இப்பத்திரிகைக்கு 1-8-0 ரூ. கொடுத்து சேர்ந்துவிடும் ஆசிரிய மானேஜர்களும், மானேஜர்களும், ஒருவருடம் வரையில் தங்கள் ரேஞ்சு சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், மாகாண சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், கருதப்படுவர். இவ்வித ஏற்பாடு ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் சரிவர நடக்கும் ரேஞ்சுகளில் தகுதியாக இருக்கும். அவ்வித சங்கங்கள் இல்லாத இடங்களில் ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கு 4 அணுவை மாத்திரம் சேர்த்து 1—4—0 அனுப்பிவிட்டால் மாகாண சங்கத்தில் அவ்வப்போது நடக்கும் நடவடிக்கைகளை தனிப்படையாக அனுப்பிவைக்கப்படும்.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுபக்கம் ஒருதடவைக்கு | ரூ. | 15 | 0 | 0 |
| அரை பக்கம் ,, | ,, | 8 | 0 | 0 |
| கால் பக்கம் ,, | ,, | 4 | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
94-95, புதுத் தெரு மண்ணடி மதராஸ்.

---

# சந்தா நேயர்களுக்கு

## ஓர் அறிவிப்பு.

முதலில் பத்திரிகை ஆரம்பித்த பொழுது 2-மாதத்திற்கு ஒரு முறை வெளியிடுவதாக ஏற்பாடு செய்திருந்தோம். இப்பொழுது பல விடங்களிலிருந்தும் அநேக நண்பர்களும் சந்தா நேயர்களும், மாதாமாதம் வெளியிடும்படியாக கேட்டுக்கொள்வதனுல் இனி நமது பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10-ம் தேதி வெளிவரும். ஆதலால் நமது சந்தா நேயர்கள் கூடுமான மட்டில் ஒவ்வொரு ஆசிரிய சகோதரரையும் சந்தா தாரர்களாக சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:— பி. வீரராகவன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


| | | |
|---|---|---|
| மலர், 1. | ஸ்ரீமுக௵ வைகாசி, ஆனிமீ<br>1933௵ மே, ஜூன் | இதழ், 2. |


## கடவுள் வணக்கம்.

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலமமு தாக விலையோ
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ
அந்தரத் தசல கோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளைய விலையோ
சப்தமே கங்களும் வச்சிரதர னாணையில்
சஞ்சரித் திடவில் லையோ
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாக விலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்க விலையோ
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக் கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே. (தாயுமானவர்)


பி. வீரராகவன் அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் அசோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

# ஆரம்பா சிரியர்களும் பி. ஏ. பட்டதாரிகளும்

ஜூன் மாதம் 18-ம்தேதி மதுரையிலுள்ள கிருஸ்தவ வாலிபர் சங்கத்தில் திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயரவர்கள் "தென்னாட்டுக் கல்வியில் பத்து வருட திட்டம்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது, தற்போது நமது தென்னாட்டில் கல்வியானது சரியான முறையில் நடைபெறவில்லை, ஆயிரக்கணக்கான கிராமங்களில் பாடசாலைகள் கிடையவே கிடையாது. முதலாவது ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகள் வைக்கப்படவேண்டும். இரண்டாவதாக 6-முதல் 14-வயதுள்ள ஒவ்வொரு ஆண் பெண் பிள்ளைகளையும் கட்டாயமாக பாடசாலைகளில் வாசிக்கச்செய்யவேண்டும். பிள்ளைகளை இரண்டு பிரிவாக பிரித்து முதல் பிரிவினை பிள்ளைகளுக்கு காலை 4-மணி நேரமும், இரண்டாம் பிரிவினை பிள்ளைகளுக்கு மாலை 4-மணி நேரமும் ஒரு உபாத்தியாயரைக்கொண்டே 8-மணி நேரம் வேலை பார்க்கச் செய்து, அவர்களுக்கு யேதோ சொற்பத்தொகையை சேர்த்து கொடுத்து விட்டு, 6 அல்லது 7 லட்சம் ரூபாய்களில் 12 அல்லது 14 லட்சம் ரூபாய்கள் பொருமான வேலை வாங்கிக் கொள்ளலாம். தற்போது ஆரம்பாசிரியர்களுக்கு கிடைக்கும் சம்பளத்தைக் காட்டிலும் இரண்டு பங்கோ மூன்று பங்கோ உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்பதாக, பொதுக்கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் கூக்குரலிடுகின்றார்கள். அவைகளெல்லாம் நடக்கக் கூடியவைகளல்ல, உண்மையில் ஆசிரியர்கள் கிராமங்களை சீர்திருத்தி கிராம முன்னேற்றத்திற்காக உழைப்பார்களானால் அக்கிராம வாசிகள் அவர்களுக்கு வேண்டிய உதவி புரிவார்கள். இன்னொரு புதிய சீர்திருத்தம் கூறுவது யாதெனில், தற்போது வேலையில்லாமல் திண்டாடி அலையும் பி. ஏ. பட்டதாரிகளையே இனி ஆரம்பா சிரியர்களாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அவர்கள் 20 ரூபாய்க்குள் தங்கள் ஜீவியத்தை சுருக்கமாக நடத்திக் கொள்ள பழக்கிக்கொள்ள வேண்டும். தற்போதுள்ள ஆரம்ப பாடசாலைகளை ஜில்லா கல்விச் சபைகளிலிருந்தும், தாலூகா போர்டுகளிலிருந்தும் விலக்கி, பஞ்சாயத்தாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும், கல்வி யிலாகாவிலுள்ள அதிகச் சிலவுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்வி அதிகாரிகளை அறவே ஒழிக்க வேண்டும். கிராமங்களிலுள்ள வயது முதிர்ந்த மக்களுக்கு ஆசிரியர்கள் இரவு பாடசாலைகளின் மூலமாக கல்வியை போதித்து நமது கிராமங்களிலுள்ள பாமர நோயை முற்றிலும் ஒழிக்க முயலவேண்டுமென்பதாக வெகு சிங்காரமாக திரு, ஐயர் அவர்கள் மேடைப் பிரசங்கம் செய்தார்.

திரு, ஐய்யரவர்கள் முதற் பேசினதிற்கும் பின்பு பேசினதிற்கும் அதிக முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் அதிகச் சம்பளம் கேட்பது நடவாதகாரியமென்கிறார். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆரம்பா சிரியர்கள் நூற்றுக்கணக்காக சம்பளம் பெற்று சுகமாக தம்வாழ்க்கையை நடத்துவதுடன், பல பொது வேலைகளில் ஈடுபட்டு தங்கள் நாட்டை புனிதமாகச் செய்கின்றார்கள். நம் நாட்டிலோ சராசரி ஒரு ஆரம்பாசிரியனின் வருமானம் 5-6 ரூபாய் தான் ஆகின்றது. இச்சொற்ப தொகையில் எவ்வாறு ஆசிரியர்கள் தம் மனைவி மக்களை காப்பாற்ற முடியும். கிராம ஊழியம் எவ்வாறு செய்ய முடியும். கிராம ஊழியமென்றால் என்ன? மேடைப் பிரசங்கமா? பொது ஜன



## தக்ஷிண வித்தியா சங்கத்தினின்று நீங்குதல்.

ஸ்ரீமான், கோகலே தக்ஷிண வித்தியா சங்கத்தின் பிரதான புருஷராக விளங்கி இச்சங்கத்தை எவ்விதம் அல்லும் பகலும் உழைத்து விருத்தி செய்தா ரென்பதை முன்பே கூறினோம். இவர் இச்சங்கத்தில் 20 வருடகாலம் உழைக்க தியாக புத்தியுடன் முன் வந்ததும் நமக்குத் தெரியும்.

1904௵ இருபது ௵ காலாவதியாயிற்று. இவர் தமது பிரதிக்ஞை பூர்த்தியானதைப் பற்றி உள்ளம் மகிழ்ந்து, ஆயுட்கால அங்கத்தினர்களின் பலர் பலவேறு காரணங்களால் தமது பிரதிக்ஞைகளை பூர்த்தி செய்ய முடியாமல் திகைத்து நிற்க, தாம் இவ்வாறு ஸத்தியப் பிரதிக்ஞானதைப்பற்றி ஆனந்தக் கடலில் மூழ்கி பகவானை ஸ்தோத்திரம் செய்தார்.

இவர் கல்லூரியைவிட்டு நீங்குங்கால் மாணவர்கள் ஒன்று கூடி கோகலேவை விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் மனக்கஷ்ட்டம் ஒருபுறமிருக்க மற்றொரு புறத்தில் முகமலர்ச்சியுடன் வந்தன பூர்வமாக உபகாரம் செய்தார்கள். அதுசமயம் நமது கோகலே பிள்ளைகள் தம்மிடம் காட்டிய மரியாதையையும், விசுவாசத்தையும் பார்த்து, மனத்தில் சோகமுற்றார். பிறகு மாணவர்களைப் பார்த்து "பிரிய முள்ள மாணுக்கர்களே, நீங்கள் இப்போது படித்த வந்தனோபசாரப் பத்திரிகையைப் பார்த்து அதிற் கூறியுள்ள விஷயங்களை மனனஞ் செய்தேன். என்மனம் களிக்கின்றது. உங்கள் அன்பார்ந்த வார்த்தைகட்கு என்மனப் பூர்த்தியான வந்தனம் அளிக்கின்றேன். இவ்வுலகில் பிரிதலென்பது துக்கமான விஷயமே. அதிலும் அந்தரங்கமாகவும் அன்யோன்னிய மாகவும் பழகினவர்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிதலென்பது துக்ககரமான விஷயமா யிருக்கின்றது. பதினெட்டு வருட காலமாய் எனக்குத் தெரிந்த மட்டில், நான் சிரமம் பாராட்டாது, இச்சங்கத்திற்காக உழைத்து வந்தேன். சங்கத்தின் நல்ல காலத்திலுஞ் சரி; கெட்ட காலத்திலுஞ் சரி, என்னைப் பிறர் தூஷித்தாலுஞ் சரி, புகழ்ந்தாலுஞ் சரி; யாதொன்றும் கவனியாமல், இச் சங்கத்தின் க்ஷேம மொன்றையே கருதி உழைத்து வந்தேன். நான் வேறு; கல்லூரி வேறு என்னும் எண்ணம் என் மனத்தில் ஒரு நாளும் உதித்ததில்லை. இப்போது, இச்சங்கத்தினின்று விலக, எனக்குக் காலம் வந்திருக்கிறது. என் உள்ளத்தில் சந்தோஷம் சோகம் இரண்டும் குடிகொண் டிருக்கின்றன. பதினெட்டு வருடங்களுக்கு முன்னால், வாலிப உற்சாகத்துடன் நான் செய்த பிரதிக்ஞை இன்று நிறைவேறியதைப் பற்றி என் மனம் களிக்கின்றது. என் ஜீவிய காலத்தில் நான் பெருமையுடன் பேசிக் கொள்ளக் கூடிய காலம் இதுவே. என் சங்கற்பம் நிறைவேறச் செய்த ஈஸ்வரனை நான் இன்று இங்குத் தோத்திரிக்கின்றேன். இச்சந்தோஷம் ஒரு பக்கத்திலிருக்க, மற்றொரு பக்கத்தில் சோகமுமிருக்கின்றது. ஏன்? நான் அந்தக்கரண சுத்தியாய் இவ்வளவு காலம் உழைத்து வந்த கல்லூரியி லிருந்து, இப்போது நீங்கவேண்டியிருக்கிறதன்றோ? என் சிநேகர்களிற் பலரும்-அவர்களைப் போலவே நீங்களும்—ஒரு கேள்வி என்னைக் கேட்கலாம். அதாவது, "இக்கல்லூரியில் இவ்வளவு அபிமானம் உங்கட்கு இருந்தால், ஏன் இதை நீர் விடவேண்டும்?" என்பதே இக்கேள்விக்கு நான் இப்பதில்தான் சொல்ல முடியும். நான் தீர்க்காலோசனை செய்த பின்னரே, இம் முடிவுக்கு வந்திருக்கிறேன். முதலில் என் தேக ஸ்திதி சௌகரியமா யில்லை. நான் கல்லூரியின் வேலையை ஒழுங்காகப் பார்க்க முடியவில்லை...........என்னோடு உழைக்கும் உபாத்தியாயர்கட்கு அதிக கஷ்டம் கொடுக்க எனக்கு மனமில்லை. மேலும், என்னைப்போல் சங்கத்திற்காக உழைக்கப் பலர் விரும்புவர். அவர்களுக்கும் நான் இடங் கொடுக்கவேண்டுவது என் கடமை. இவை மாத்திரம் நான் இப்போது உங்களை விட்டுப் போவதற்குக் காரண மென்று நான் சொல்லவில்லை. சில வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு கதை படித்தேன். சமுத்திரக் கரைக் கரு

கில் குடி குடித்தனங்களுடன் ஒரு மனிதனிருந்தான். அவனைச் சுகவாஸி என எல்லோரும் மதித்தார்கள். அவனுக்குச் சமுத்திரம் அலைபுரண்டு வருவதைக் கண்டால், மனோற்சாகமுண்டாகும். அச்சமுத்திரத்தில் கப்பற்பிரயாணம் போக வேண்டுமென அவன் இச்சை கொண்டான்; உடனே தன் சொத்தையெல்லாம் விற்று, ஒரு கப்பல் வாங்கி, கடலில் பிரயாணம் செய்தான். இரண்டு தடவை சௌக்கியமாக வீடு திரும்பினான்; மூன்றும் தடவையோ, கடலுக் கிரையானான். என் நிலைமையும் அவன் நிலைமையைப்போ லிருக்கிறது நான் இங்கு யாதொரு கஷ்டமுமின்றி, சுகஜீவியம் செய்து வருகிறேன். ஆயினும், என் மனம் இதைவிட்டு விட்டு வேறு விதத்தில் ஜன ஊழியஞ் செய்ய என்னைத் தூண்டுகிறது. நான் ஜயமடைந்தாலும் அடையலாம்; அபஜயமடைந்தாலும் அடையலாம். நான் ஒருவாறு மனத்தில் நிச்சயித்துவிட்டேன். எனது தேச ஊழியத்தால் தேசத்திற்கு நன்மையே உண்டாகுமென்பது என் பூரண நம்பிக்கை. இந்தியாவில் ஜன ஊழியஞ் செய்வது சிரம சாத்தியமானது. சில சமயம் நமக்கு மனத் தளர்ச்சி ஏற்படும். இதை ஒரு பொருளாக எண்ணாமல், நாம் உழைக்கவேண்டும். ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும், ஈஸ்வரார்ப்பண புத்தியுடனும் தேச ஊழியஞ் செய்ய வேண்டும். இது தான் நமது கடமை. நான் என் புதிய வேலையில் வென்றாலும் சரி; தோற்றாலும் சரி; என் மனம் எப்போதும் இக்கல்லூரியை விட்டகலாது. நான் என் முடிவுரையை முடிக்குமுன் ஒரு வார்த்தை உங்களுக்குச் சொல்லப் பிரியப்படுகிறேன்..................நான் இந்தியா முழுவதும் பிரயாணஞ் செய்திருக்கிறேன். இக்கல்லூரியைப் போன்ற வித்தியாலயம் எங்கும் இல்லை. இதைவிடக் கருவிகள், சில கல்லூரிகளில் அதிகமாயிருக்கலாம். சில கல்லூரிகள் வெகு நாட்கள் முன்னமே ஏற்பட்டிருக்கலாம். ஆனால், பரமத்தியாக புத்தியுடன் இங்குழைக்கும் அத்தியாபகர்களைப் போன்றவர்களை ஓரிடத்திலும் காண்பதரிது. சத்விஷயத்தில் இந்தியர்கள் ஒன்று சேர்ந்து, பணப்பற்று இல்லாமல், உழைக்கக் கூடும் என்பதை இக்கல்லூரி நன்கு விளக்குகின்றது...........நீங்களும் ஊக்கத்துடன் இவ்வித்தியா சாலைக்கு இயன்ற வாறு உழைக்கவேண்டும். வேறு யாதொன்றும் சொல்வதற்கில்லை. உங்கள் எல்லோருக்கும் வந்தனமளிக்கிறேன். உங்களிற் சிலர் இந்தியாவின் க்ஷேமத்திற்காக வேறு வழிகளில் உழைப்பீர்கள். நாம் எல்லோரும் அடிக்கடி இங்குச் சந்திப்போமென நம்புகிறேன்; கடவுள் இக்கல்லூரியையும் உங்களையும் ஆசீர்வதிப்பாராக?'' என்று கூறி முடித்தார்.

---

## பால் கொடுக்கும் மின்சாரப் பசு

அமெரிக்காவிலுள்ள நியூ யார்க் பட்டணத்தில் ராபர்ட் என்பவரால் மின்சார இயந்திர சக்தியால் ஒருபசுவொன்று செய்யப்பட்டிருக்கின்றது. அது உயிருள்ள சாதாரணப் பசுவைப் போல் வைக்கோல் புசிக்கின்றது. காது, வால் முதலிய அவயவங்களை உயிருள்ள பசுவைப் போல் அசைக்கின்றது. சாதாரண பசும்பாலைப் போல் அந்த மின்சாரப்பசு பால் கொடுக்கின்றது. இந்த மின்சாரப்பசு அடுத்த உலக பொருட் காட்சி சாலைக்கு அனுப்பிக்கப்படும். இதன் விலை சுமார் 2500 ரூபாய் ஆகின்றது.

---

## இந்தியா, லண்டன் டெலிபோன்

இந்தியா லண்டன் டெலிபோன் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது. லண்டனிலிருந்து இந்திய ஹைகமிஷனர், ஸர். பி. என். மித்ரா, போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், ஸர்சிங் ஸ்லேவுட், இந்தியா மந்திரி ஸர் சாம்யுல் ஹோர் முதலிவர்கள் இந்தியாவிலுள்ளவர்களுடன் பேசினார்கள். லண்டனில் பேசினது இந்தியாவில் தெளிவாக கேட்கப்பட்டது.

# இந்திய வர்த்தமானம்

## தேவதாஸ் காந்தி திருமணம்.

திருதேவதாஸ் காந்திக்கும், ஸ்ரீமதி, லக்ஷ்மி அம்மாளுக்கும், விவாகம். ஜூன் மாதம் 16ம் தேதி காலை 5-30 மணிக்கு பூனாவில், பர்ண குடியில் மஹாத்மா காந்தியின் குமாரரான. திரு, தேவதாஸ் காந்திக்கும், சேலம் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் குமாரத்தி ஸ்ரீமதி, லக்ஷ்மி அம்மாளுக்கும் விவாகம் நடந்தேறியது. மகாராஷ்ட்டிர தேசத்தில் பிரசித்தி பெற்றபண்டிதரான ஸ்ரீ லக்ஷ்மண சாஸ்திரியார் வேதமுறைப்படிவிவாகத்தை நடத்திவைத்தார். இந்த கலியாணத்தில் மேள தாளங்கள், ஊர்வலங்கள், பாண வேடிக்கைகள், தாசி நடனங்கள், கச்சேரிகள், முதலிய, காசைப்போக்கும் அனாவசியமான ஆடம்பரங்கள் ஒன்றுமில்லை. மகாத்மா உபவாசத்தின்போது பிரதிதினமும் பஜனை செய்துவந்த கோஷ்ட்டியாரே அன்றைய தினம் வந்து மங்களகீதங்களும், "ரகுபதி ராகவ'' நாமாவளியையும் பாடினர். ஆசீர்வாதம் பெற தன்னை வணங்கின மணமக்களுக்கு தம்கையால் நூற்ற நூல் மாலையையும், பகவத்கீதை, பஜனாவளி புத்தகங்களையும், 2 தேங்காய்களையும் பரிசாக அளித்தார்.

மணமகள் கலியாணத்தின்போது தன்கையில் ஸ்ரீமதி, கஸ்தூரிபாய் அளித்த இரண்டு தந்த வளையல்களையும், கழுத்தில் லேடி தாக்கர்ஸி அளித்த மெல்லிய தங்கச் சங்கிலி ஒன்றையுந் தவிர வேறு நகை எதுவும் அணியவில்லை.

## மகாத்மாஜியின் தேக நிலை.

மகாத்மாஜியின் தேக நிலை வரவர அபிவிருத்தியடைந்து வருகிறது. எடையும் அதிகரித்துவருகிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை அவர் வாராந்திர உபவாசத்தை யாரம்பிக்குமுன், டாக்டர்கள், கில்டர், புருஷோத்தம படேல், படாக், கார்புரி முதலியவர்கள் மகாத்மாஜியைச் சோதனை செய்து பார்த்துவிட்டு தேக நிலை திருப்திகரமாயும், ஆனால் சரீரப் பிரயாசையோ, மனோவேலையோ இல்லாமல் இன்னும் பூரண ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியது அத்தியா வசியமென்றும் வற்புறுத்தினர்.

## ராஜீயக் கைதிகள் விடுதலை

பார்லிமெண்டில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு உதவி இந்தியா மந்திரி பதில் கூறுகையில், காங்கிரஸில் சம்பந்தப்படாத பல பிரபல தலைவர்கள் ராஜீயக் கைதிகளை விடுதலை செய்யுமாறும், இந்திய அரசியல் வேலையில் காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெறுமாறு வற்புறுத்தியும் தந்தியனுப்பி யிருப்பதாயும், ஆனால் பிப்ரவரி மாதம் இந்தியா மந்திரி தெரிவித்ததற்கு மேல் எதுவும் கூற அவசியம் ஏற்படவில்லையென்றும் தெரிவித்தார். மகாத்மாஜீ முதலியவர்களை விடுதலை செய்தால் சட்ட மறுப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படமாட்டாதென்று உறுதியான அத்தாட்சிகள் இருந்தாலொழிய விடுதலை சாத்தியமில்லையென்று பிப்ரவரி மாதம் இந்தியா மந்திரி தெரிவித்தார்.

## இன்ஷியூர் பார்சலிலிருந்து நோட்டுக் களவு.

சென்னை நேஷனல் பாங்கியிலிருந்து நீலகிரி ஜில்லாவில் தேவலா என்ற விடத்திலுள்ள எஸ்டேட் சொந்தக்காரர் மிஸ்டர் நிகால்ஸிற்கு 100 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்யப்பட்ட ஒரு பார்சல் மூலம் 1500 ரூபாய்க்கு கரென்ஸி நோட்டுகள் அனுப்பப்பட்டன. ஆனால் அதைத் திறந்துபார்த்த போது 1000 ரூபாய் நோட்டுகள் களவு போய் அவற்றிற்குப் பதில் வெற்றுக் காகிதங்கள் வைக்கப்பட்டிருந்தன. போலீசார் கிளைத்தபாலாபீஸ் போஸ்டு மாஸ்டர் ஸ்ரீமான் வெங்கடராவைக் கைது செய்திருக்கின்றனர்.

# ஆரம்பப் பாடசாலைகள் போட்டா போட்டி

ஏறக்குறைய நமது இராஜதானியில் 57000 கிராமங்களும் பட்டிணங்களும் இருக்கின்றன. இதில் ஏறக் குறைய 26000 கிராமங்களிலும் பட்டிணங்களிலும் தான் பாடசாலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மிச்சம் 31000 கிராமங்களுக்கு பாடசாலைகள் என்பது கருப்போசிகப்போ தெரியவே தெரியாது. இது இப்படியிருக்க நமது இராஜதானியில் ஏறக்குறைய 56000 ஆரம்ப பாடசாலைகள், எய்டட், (32300) முனிசிபல், (1600) லோகல் போர்ட், 17600,பஞ்சாயத், லேபர்,(2600 முதலிய ஏஜென்ஸிகளால், நடத்தப்பட்டு வருகின்றன. எய்டட் பாடசாலைகள் இருக்குமிடத்தில் முனிசிபாலிடியாரும், லோகல்போர்டாரும், லோகல் போர்டார் பாடசாலைகள் இருக்கு மிடத்தில் பஞ்சாயத்தாரும், ஒருவருக் கொருவர் போட்டா போட்டி போடுகின்றார்களேயொழிய பாடசாலைகள் வாசனையே அறியாத 36000 கிராமங்களில் ஏன் லோகல் போர்டார் பாடசாலைகளை வைக்க ஏற்பாடு செய்யக்கூடாது. குண்டு சட்டியில் குதிரை ஓட்டினான் என்ற பழமொழியொப்ப ஏற்கனவே பாடசாலைகள் வைத்திருப்பவர்களை தொந்திரவு செய்வானேன். ஆரம்பக்கல்வியை விருத்திசெய்ய இது தற்கால நவீன முறைபோலும்! ஒவ்வொரு வருடமும் டைரக்டர் அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்ட்டை வாசித்துப் பார்த்தால் ஏற்கனவே இருந்த எய்டட் பாடசாலைகள் குறைந்து லோகல் போர்ட் பாடசாலைகள் அதிகமிருக்கும், அல்லது லோகல் போர்ட் பாடசாலைகள் குறைந்து பஞ்சாயத் பாடசாலைகள் அதிகமாயிருக்கும். ஒன்றுக்கொன்று போட்டிப்போடுவதாக காணப்படுமேயல்லாது ஒரு ஜில்லாவிலேயாவது பாடசாலைகள் இல்லாத கிராமங்களில் 10 பாட சாலைகள் புதிதாக ஏற்பட்டதாக இருக்காது. உதாரணமாக (1924-25)ல் 43000 பாடசாலைகள் இருந்தன. ( 931-32)ல் 51000 பாடசாலைகள் இருந்தன. 7-வருடங்களில் 8000 பாடசாலைகள் தான் விருத்தியாயின. ஆனால் பணமோ ஒட்டிக்கு இரட்டையாக. சிலவாகி இருக்கின்றது இதற்குக் காரணம் என்ன? போட்டா போட்டியே? பாடசாலைகள் ஏற்கனவே இருககும்படியான இடத்தில் முட்டிக்கொள்வதைக் காட்டிலும் இல்லாத இடங்களில் தாராளமாக பாடசாலைகளை ஏற்படுத்தலாம் இது விஷயத்தில் அரசாங்கத்தார் ஜீ ஓ. நெ. 2223 லா எடுகேஷன் (1—12—26), நெம்பர் 580 லா எடுகேஷன் (12—4—27) போட்டா போட்டிகள் போடக்கூடாது என்பதாக பல உத்திரவுகள் பிறப்பித்திருந்தும், அவைகளெல்லாம் ஏட்டுச் சுரக்காயாக இருக்கின்றனவேயொழிய, அநேகமாக லோகல் போர்டார் இவ்வுத்திரவுகளை புறக்கணிப்பதாக தெரியவருகின்றது. இது இப்படியிருக்க லோகல் போர்டார் பாடசாலைகளை அதிகப்படுத்துகின்றார்களே அதனால் ஆரம்பாசிரியர்களுக்காவது ஒருகதி மோட்சம் உண்டாவென்றால் அதுவும் கிடையாது. ஒரு அளவான தொகை லோகல் போர்டாருக்கு கொடுக்கப்படுகின்றது, அதை மெம்பர்கள் அளவுக்கு மீறி தம்மிஷ்டம்போல் பாடசாலைகளை வைத்துவிட்டு ஏற்கனவேயுள்ள உபாத்தியாயர்களுடைய சம்பளங்களையும் அனுவசியமாக குறைத்துவிட்டு, சிலபோர்டார்கள் அச் சொற்ப சம்பளத்தையும் தேதிப்பிரகாரம் உபாத்தியாயர்களுக்கு கொடுக்காமல் அவர்களை பலவித கஷ்டங்களுக்கு உட்புகுத்துகின்றார்கள். இவ்வித போட்டா போட்டிகளால் ஏழைமக்களின் வரிப்பணம் சமுத்திரத்தில் கரைத்த புளியாக போகின்றதேயொழிய, நாட்டின் கல்வியோ, ஆசிரியின் நிலைமையோ எள்ளளவேனும் விருத்தியானதாக தெரியவில்லை. இனியாவது அரசாங்கத்தார் இவ்வித போட்டா போட்டிகளுக்கு இடங்கொடாமல் தங்களுடைய உத்திரவுகளை நடவடிக்கையில் கொண்டு வரும்படியான சட்டதிட்டங்களை ஏற்படுத்துவார்களாக.

# ஆரம்ப பாடசாலை

## ஆசிரியர் தோழன்

(சி. வேங்கடேச அய்யர், பி. ஏ., எல். டி., டிப்டி இன்ஸ்பெக்டர்)

மானிட ஜென்மமெடுத்தோர் இம்மை மறுமையென்று எடுத்துக் கூறு நின்ற பிறப்புகளில் அடையவேண்டிய பலனை அளிக்க முக்கிய ஆதாரமாயுள்ளது ஒழுக்கு. அவ்வித ஒழுக்கை அடைய சாதகமாயுள்ளது கல்வி. எல்லையில்லாத இக்கல்வியின் மேன்மையைப் பற்றி எடுத்துக் கூறுத படிப்பாளர்கள் இல்லை. எத்தகைய கல்வித்துறையில் இறங்கவேண்டுமாயினும் ஓர் அஸ்திவாரம் வேண்டும். அடிப்படையின்றிச் சுவர் நிற்காது. அதன் வலுவினால்தான் மற்ற கட்டிடம் மாடமாளிகை கட்டுகிறார்கள். அதுபோல எக்கல்விக்கும் ஆதாரமாயுள்ளது ஆரம்பக் கல்வி. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றனர் பெரியோர். இவைகளே முக்கிய பாடங்களாக இத்தகைய பாடசாலைகளில் கற்பிக்கிறார்கள். முன்பின் எவ்வித பயிற்சியுமில்லாத சிறுவர், சிறுமிகட்கு நூதனமாக ஒருபாஷையின் மர்மங்களையும் எண்களையும் கற்பிக்கத் திறமை வாய்ந்த ஆசான் தேவையன்றோ. இப்பொழுது இங்கு எழுதப்புகும் விஷயங்கள் அவ்வாசான் தற்கால முறைப்படி பாடசாலையை நடத்தும் விஷயத்தில் பேருதவியாயிருப்பதல்லாமல், அவ்வாசானின் தோழனாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

### பதவிவரணை

2. பிரதம அல்லது ஆரம்பக் கல்வி புகட்டும் பாடசாலைகளில் ஒன்று முதல் எட்டு வகுப்புகள் முடிய இருக்கலாம். எட்டு வகுப்புகளும் இருந்தே தீரவேண்டுமென்ற நியாயம் இல்லை. ஊரின் நிலைமை, வகுப்புகளின் அவசியம் ஆசானின் திறமை இவைகளைப்பொருத்து வகுப்புகள் குறைந்தோ அதிகப்பட்டோ இருக்கலாம். முதல் ஐந்து வகுப்புகள் முடிய கற்பிக்கும் பாடசாலைகள் 'கீழ்தர ஆரம்பப் பாடசாலைகள்' எனவும்; ஆறுவது வகுப்பும் அதற்கு மேலும் உள்ள பாடசாலைகள் 'உயர்தர ஆரம்பப் பாடசாலைகள்' எனவும். பெயர் படும்.

கல்வி இலாகா சட்டத்தின்படி அங்கீகாரம் பெற்று நடைபெறும் பாடசாலைகளில் தகுந்த யோக்கியதா பத்திரம் பெற்றுள்ள ஆசான்களை நியமிக்கவேண்டும். அவர்களே துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஆசான்களாவார்கள். அவர்கள் போதனாமுறை பயின்றோர் எனவும், முறைபயிலாதவர்கள் எனவும் இருவகைப்படும். இவ்விரண்டையும் உட்பிரிவாகப் பிரிப்போமாயின் (எ) லோயர் கிரேட் (பி) ஹையர் கிரேட் (சி) செகண்டரி கிரேடு என மூவகையாகப்பிரிக்கலாம். இம்மூன்று வகையாளர்களும் முறைபயில, மூவகை போதனாமுறைப் பாடசாலைகளுள் (பி) உயர்தர ஆரம்ப பாடசாலைகளில் (8) வது வகுப்பு முடிய படித்து டிப்டி இன்ஸ்பெக்டர், ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்ஸ் ஹோதாவுக்குக் குறையாத அந்தஸ்துள்ள பரிக்ஷாதிகாரிகளிடம் அச்சுபாரத்தில் தேர்ச்சி 'சுமார்' என்ற விவரத்தோடு இ. எஸ். எல். ஸி. சர்டிபிகேட் பெற்றிருப்பவர்களும், அல்லது செகண்டரி பாடசாலைகளில் (மூன்று) வது பாரம் அதற்குமேல் 5 பாரம் வரை படித்து பாஸ் செய்து எஸ். எஸ். எல். ஸி.

தேருதவர்களும் (உயர்தர) ஹையர்கிரேடுக்குப் பயில அருகர். [எ] இதற்குக் குறைந்த யோக்கியதாபத்திரம் பெற்றோர் லோயர் கிரேடு எனப்படுவர். [சி] எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையோ முன் காலத்திய மெட்ரிக்குலேஷன் பரிக்ஷையோ எப். ஏ. அல்லது இன்டர்மீடியேட் பரிக்ஷையோபாஸ் செய்தவர்கள் செகண்டரி கிரேடாகக் கருதப்படுவார்கள். இதற்குமேல் பரிக்ஷைகள் பாஸ் செய்திருந்தபோதிலும் பிரதம பாடசாலைகளில் அவர்கட்கும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்கட்கும் சம்பளம் கிராண்டு இவ்விஷயங்களில் வித்தியாசம் ஒன்றும் ஏற்படவில்லை. அன்னோர் பயில எல். டி. கிளாஸ் உண்டு. எந்த கிரேடைச் சார்ந்தவராயினும் முறை பயிலாதார் உபாத்திமைத் தொழிலுக்குத் தகுந்தவரல்லர். அதிலும் லோயர் கிரேடில் பயின்றவர்களை அதிகமாக நியமித்தல் நன்றல்ல என்பதும்' எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இவர்களைத் தவிர கைத்தொழில் பயின்றோர் சித்திரம் டிரில் பாட்டு இவைகளில் தேர்ந்தோர், சில பாஷைகளில் பிரபல வித்வான்கள் இன்னோரும் பிரதம பாடசாலைகளில் வேலை செய்யலாம். இவர்கள் ஆரம்ப பாடசாலைகளில் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை; அமர்ந்திருப்பினும் அவர்கள் பொருட்டு உயர்ந்த சம்பளம் உயர்தர கிராண்டு அளிப்பாரும் இலர். கவர்ன்மெண்டு, முனிசிபாலிடி, தாலூகா போர்டு, பஞ்சாயத்து, லேபர்; திராவிட சகாய பாடசாலைகளில் முறைபயின்ற (பி) பிரிவினை ஆசான்களையே நியமிக்க வேண்டுமென்ற சட்டம் உண்டு. அதிலும் போதனுமுறை பயின்று பரிக்ஷைகளில் தேறி சர்டிபிகேட் பெற்றிருக்க வேண்டும். மகம்மதிய உபாத்தியாயர்கள், படிப்பில் பின்னடைந்த ஜாதியினர், உபாத்தியாயினி இவர்கள் விஷயத்தில் போதனு முறை பயிலாதவர்களை நியமிப்பதனுல் அன்னோர் லோயர் கிரேடுப் பயில வேண்டிய யோக்கியதாபத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும். ஏதோ சில சந்தர்ப்பங்களில் முறை பயிலாதாரை கொஞ்ச காலத்திற்கு பதிலிகளாக நியமிக்குங்கால், லோயர் கிரேடை தவிர்த்து உயர்தர யோக்கியதாபத்திரம் பெற்றவரையே நியமிக்கிறார்கள். இங்கும் அவர்கள் பரிக்ஷாதிகாரிகளைக் கலந்துகொண்டு அவர்களிட அபிப்பிராயம் பெற்றே நியமிப்பார்கள். ஏதாவது ஒரு பாஷை கற்பிக்க வேண்டுமாயின் அப்பாஷையில் தேர்ச்சிபெற்ற சர்டிபிகேட் உள்ளவர்களை நியமனம் செய்ய வேண்டும்.

ஒரு ஆசான் தன் திறமைக் கேற்ப கற்பிக்க வேண்டுமாயின், தன்னிடம் 40 பிள்ளைகள் வரை இருக்கலாம். இதுவும். ஒரே வகுப்பில் தான் இருக்கவேண்டுமென்ற சட்டமில்லை, எனினும் முதல் நான்கு வகுப்புகளிலோ, 3 வகுப்புகளிலோ 40 பிள்ளைகள் வரை வைத்துக்கொண்டு கற்பிப்பதாயின், அதிகம் அபிவிருத்தி காண்பதரிதென்பது யாவரும் அறிந்ததே. 40 பிள்ளைகட்குமேலும் நான்கு வகுப்புகட்கு மேலும் உள்ள பாடசாலைகளில், பிள்ளைகளின் எண்ணிக்கை, வகுப்புகளின் தொகுதி இவைகளைப் பொருத்தே ஆசான்களின் எண்ணிக்கை நிச்சயிக்கப்படும். ஒவ்வோர் வகுப்புக்கு ஒரு ஆசான் நியமிப்பதும், பாலர்கட்குப் போதிக்க உபாத்தியாயினிகள் நியமிப்பதும் மெச்சத் தகுந்த காரியங்கள் எனவே எண்ணலாம்.

## பரிபாலனப் பிரிவினை.

ஆரம்ப பாடசாலைகளைப் பரிபாலிப்பது சுய ஆட்சி சங்கங்களின் (முனிசிபாலிடி, தாலூகா போர்டு, பஞ்சாயத்து) முக்கிய அலுவல்களில் ஒன்றாகும். பரிபாலிக்கும் விஷயத்தில் அன்னோர் கவனிக்க வேண்டிய ஒழுங்குகளைப்பற்றி முனிசிபல் சட்டம், லோகல் போர்டு, பஞ்சாயத்து ஆக்டு இவைகளில் விரிவாகக் காணலாம். இச்சங்கங்கள் தங்களிடமுள்ள பொருளோடுகூட கவர்ன்மெண்டிலிருந்து பெற்றுவரும் பொருளையும் சேர்த்து பாடசாலைகளை நடத்துகிறார்கள்.

இவைகளைத் தவிர பிரதம கல்வி சட்டத்தின்படி ஜில்லா கல்விச் சபையின் உதவி பெற்று நடைபெற்றுவரும் திராவிட சகாய



சேவை யல்லவா? உண்மையில் பொது ஜன சேவை செய்பவர்களுக்கு இக்காலத்தில் ஒரு காசு கொடுக்கும் புண்ணியவான்கள் யார்? மோசப் பேச்சும், அசட்டுப் பேச்சும், பேசும் வேஷதாரிகளுக்கன்றோ காலமாயிருக்கின்றது. எத்தனையோ ஆசிரியர்கள் இரண்டு வேளை சரியான உணவுங்கூட கிடைக்காமல் திண்டாடுகின்றார்கள். இந்த நிலையில் ஆசிரியர்கள் சம்பளங்கள் அதிகப்படியாக கேட்கக்கூடாதென்பதாகவும் கிராம சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதும். எவ்வாறு பொருந்தும் ஆசிரியர்கள் க்ஷேமமாயிருந்தாலல்லவோ, நமது நாட்டிற்கு க்ஷேமமுண்டு. இது நிற்க பி. ஏ. பட்டம் பெற்றவர்களை ஆரம்பா சிரியர்களாக தேர்ந்தெடுக்கும்படி சொல்லுகின்றார்.

இது வெகு வேடிக்கையாக இருக்கின்றது. முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கின்றதோ அவ்வளவு சம்மந்தம், ஆரம்பா சிரியர்களுக்கும், பி. ஏ. பட்டம் பெற்றவர்களுக்கும் உண்டு. ஆரம்பாசிரியர்கள் தன்னடக்கமும், அமைதியும், சாந்தமும், மனோதிடமும் தியாகபுத்தியும், பரோபகார சிந்தையும் உடையவர்களாக இருக்க வேண்டும், இத்தகைய குணங்கள் தற்போது பி. ஏ. பட்டம் பெற்ற மாணவர்களில் அநேகருக்கு இருக்கின்றதா என்பதுதான் சந்தேகம். இதனுல் பி. ஏ. பட்டம் பெற்றவர்களை இழிவாக வாசகர்கள் எண்ணுதல் கூடாது. மாணவர்களின்மீது குற்றமன்று. அவர்கள் கற்றுக்கொண்ட உயர்தரக் கல்வியிலுள்ள குற்றமாகும். யேதோ இரண்டொரு ஆங்கில வார்த்தைகளை கற்றுக்கொண்டுவிட்டால் தங்களைக்காட்டிலும் கிராமாந்திரங்களிலுள்ளவர்களெல்லாம் அறிவற்ற முட்டாள்களென்று மாணவர்கள் நினைக்கின்றார்கள். தாங்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களையும் கிராமங்களிலுள்ள பந்து மித்திரர்களையும், கண்ணெடுத்தும் பார்ப்பது கிடையாது. அவர்களுடன் கலந்து, கொள்வதும் கிடையாது. இந்த அபிப்பிராயத்தை சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை கடற் கரையில் நடந்த மாணவர்கூட்டத்தில், காலஞ்சென்ற பாஞ்சால சிங்கமென அழியாப்புகழையுடைய லாலா லஜபதிராய் அவர்கள் மாணவர்களைப்பார்த்துமாணுக்கர்களே இந்தியதேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க விருப்பமுள்ளவர்களானுல், நீங்கள் ஜெயிலுக்கு போகவேண்டாம். கலாசாலைகளைவிட்டுவிடவேண்டாம், உங்களுக்கு அகப்படும், ஓய்வு காலங்களில் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று நீங்கள் கற்றுக்கொண்ட கல்வியை கிராமத்தாருக்குச் சொல்லுங்கள், சேரிகளுக்குச் சென்று சுக வாழ்க்கையை போதியுங்கள். இன்னும் பலவித பிரசாரங்கள் செய்து உங்கள் முன்னோர்களும் நீங்களும் பிறந்து வளர்ந்த கிராமங்களை சீர்திருத்துங்கள் என்பதாகக் கூறினர். இதுவரையில் எத்தனை சர்வ கலாசாலை பி. ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் இவ்வித வேலையைச் செய்திருக்கின்றார்கள். இத்தகைய உயர்தர ஆங்கிலக் கல்வி கற்ற மாணவர்களா கிராம உபாத்தியாயர்களாகவும், சீர்திருத்தக்காரர்களாகவும், உழைக்கப் போகின்றார்கள்? இது கனவில் கண்ட ஜலமேயொழிய வேறில்லை. அவ்விதம் யேதோ வைத்துப்பிழைப்புக்காக ஒரு சமயம் உபாத்திமை வேலைஒப்புக்கொண்டபோதிலும்தற்போதுள்ள ஆசிரியர்களைப்போல் வணங்கி வேலை செய்வார்களென்பது சந்தேகம்தான். எதைப்பேசினும் பொருந்தப்பேச வேண்டும். பேசுவது சுலபம், பேசுவதை நடத்தையில் கொண்டுவருவது மிகவும் கடினம். இனியாவது திரு, சத்தியமூர்த்தி ஐய்யரவர்கள் பேசுவதற்கு முன்பாக சற்று யோசித்துப் பேசுவாரென நம்புகின்றோம்.

# கோபால கிருஷ்ண கோகலேவின்

## ஜீவிய சரித்திரம்.

(1866—1915)

(பாண்டு ரங்கன்—திருச்சி)

### பம்பாய் சட்டசபை.

1899-ம் வருஷம் பம்பாய் சட்டசபைக்கு நமது கோகலே மத்திய ஜில்லாக்களுக்குப் பிரதி நிதியாக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபையில் இவர் இரண்டு வருஷ காலந்தான் அங்கத்தினராக இருந்தார். பிறகு 1901-ம் வருஷம் இச்சபையின் பிரதி நிதியாய் இந்திய சட்ட சபைக்கு அனுப்பப்பட்டார். இவர் மாணபரியந்தம் பம்பாய் சட்டசபையிலாவது இந்திய கவர்ன்மெண்ட் சட்ட சபையிலாவது அங்கத்தினராகவே யிருந்துவந்தார்.

இவர் பம்பாய்ச் சபை அங்கத்தினராக யிருக்கையில் இரண்டு முக்கியமான விஷயங்கள் வாதத்திற்கு வந்தன. அவைகளில் ஒன்று, ஜில்லா முனிசிபல் ஆக்டுச் சீர்திருத்தம்; மற்றொன்று, நிலவரி சட்டச் சீர்திருத்தம். பூனா முனிசிபாலிடியில் இவர் வெகு காலம் அங்கத்தினராக இருந்தமையால், சட்ட சபையில் முனிசிபல் விஷயங்கள் வாதத்திற்கு வந்தபோது, இவர் முனிசிபாலிடி விஷயங்களில் தமது சம்பூரண ஞானத்தை வெளியிட்டார்.

### நிலவரிச் சட்டம்.

பிறகு நிலவரிச் சட்டச் சீர்திருத்தம் பம்பாய் சட்ட சபையில் அபிப்பிராயத்திற்கு வந்தது. ஏழைக் குடியானவர்கள் தங்கள் சொந்த நிலத்தை மிராசுதார்களிடம் ஒத்துவை வைத்துப் பணம் வாங்குவது வழக்கம். பிறகு வாங்கின பணத்தை திருப்பிக்கொடுக்க முடியாமற் போகவே, மிராசுதார்கள் அந்நிலங்களை ஆக்கிரமித்து தங்கள் வசம் செய்துகொள்வார்கள். ஏழைக் குடியானவர்கள் நிலத்தையும் கைவிட்டு, கையில் பணமில்லாமல், திண்டாடி தெருவில் நிற்பார்கள். இக்கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்தி செய்ய அரசாங்கத்தார் சட்டமொன்றை ஏற்படுத்த அவசியமாயிற்று. குடிகள் நிலங்களை ஒத்துவை வைக்கக்கூடாதென்றும், வருஷாந்திர நிலவரும்படியையே அவ்வாறு வைக்கலாமென்றும் கவர்ன்மென்டார் எண்ணங் கொண்டனர். இவ்விஷயத்தைப் பற்றி பிரோஸ்ஷா மேதாவும், கோகலேயும், இராஜதானியிலுள்ள முக்கிய சங்கங்களையும், பிரமுகர்களான ஜன நாயகர்களையும் கலந்து ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று வாதாடினார்கள். கவர்ன்மெண்டார் ஒப்புக் கொள்ளவில்லை, உடனே ஜனங்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர் யாவரும் சபையை விட்டு வெளிவந்தனர். சர்க்கார் கொண்டுவரப்பட்ட சட்டம் சட்ட சபையில் நிறைவேறின போதிலும், அச்சட்டம் அதிகமாக நடவடிக்கையில் கொண்டுவரப்படவில்லை.

1901-ம் வருஷம் ஸர். பிரோஸ்ஷா மேதா என்பவர் இந்திய சட்ட சபையில் தமது ஸ்தானத்திற்கு இராஜி நாமா கொடுத்தார். ஆகவே இவருக்குப் பதிலாக ஏகோபிதமாக பம்பாய்ச் சட்ட சபையார் கோகலேயை இந்திய சபைக்கு நியமித்தனர். இத்தகைய ஸ்தானத்திற்கு நமது கோகலேவைக் காட்டிலும் வேறு புருஷரும் உரியவரோ?



பாடசாலைகளும் உள. முன்னர் எடுத்துக் காட்டியவைகளைவிட இப்பாடசாலைகளே எண்ணிக்கையில் அதிகப்படும். இவைகளும் திரவிய சகாய மிஷின் பாடசாலைகள் எனவும், மிஷின் அல்லாத பாடசாலைகள் எனவும் பிரிவுபடும். இவைகளையும் இன்னமும் பிரிவுபடுத்தின் பெருகும். மிஷின் பாடசாலைகளில் அச்சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஒருவர் காரியதரிசியாவார். உபாத்தியாயரே மானேஜராக இருந்துவரும் பாடசாலைகளில் காரியதரிசியை மானேஜர் நியமிப்பார். இவர்கள் எல்லோரும் கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்றுவரும் கிராண்டுத் தொகையுடன் பிள்ளைகளிடமிருந்து வசூலிக்கும் சம்பளம் ஜனங்களிட நன்கொடை தம்மிட சொந்ததனம் இவைகளைக் கொண்டு பாடசாலைகளை நடத்துகிறார்கள்.

பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிப்பது மானேஜ்மெண்டின் மூலதனத்தைப் பொருத்தேயுள்ளது. பஞ்சாயத்து, லேபர் பாடசாலைகளில் சம்பளம் வசூலிப்பதில்லை. சில ஜாதிப் பிள்ளைகளுக்கு சம்பளம் எங்கும் வசூலிக்கிறதில்லை. திரவிய சகாய பாடசாலைகட்கு அவ்விஷயத்தில் கவர்ன்மெண்டிலிருந்து ஈடுசெய்கிறார்கள். பட்டாளத்திற்குச் சென்று வந்தவர்களின் குழந்தைகள், இவர்கட்கும் இதுவே பொருந்தும். இதர பாடசாலைகளில் இவ்விஷயம் இடத்தையும் மானேஜ்மெண்டையும் கவனித்து ஆராயவும். கட்டாயப் படிப்பு ஏற்பட்டிருக்கும் இடங்களிலும் கூட இதேவிதி அனுசரிக்கப்படும்.

### பிரிவினைக்கேற்ப பாடசாலைகளைக் காட்டும் ஓர் அட்டவணை.

| | |
|---|---|
| 1. சர்க்கார் பாடசாலை | இவை |
| 2. முனிசிபல் பாடசாலை | பகல் |
| 3. தாலூகா போர்டு பாடசாலை | இரவு |
| 4. பஞ்சாயத்து பாடசாலை | ஆண் |
| 5. லேபர் பாடசாலை | பெண் |
| 6. (1) மிஷின் திரவிய சகாய பாடசாலை | - கலப்பு |
| (2) மிஷின் அல்லாத திரவிய சகாய பாடசாலை | எனப் பிரிவுபடும். |
| [ஜி] திரவிய சகாயம் பெறாத மிஷின் பாடசாலை | |
| [2] மிஷின் அல்லாத பாடசாலை | |

ஜி. 1. 2. இவைகள் திரவிய சகாயமும் அங்கீகாரமும் பெறுங்கால் திரவிய சகாயப் பாடசாலைகளாகும்.

ஒரு ஆரம்பப் பாடசாலைகளில் வைத்திருக்க வேண்டிய ரிஜிஸ்டர்களாவன :—

### ரிஜிஸ்டர்கள்

1. பிள்ளைகள் சேர்க்கை விடுதலைப்பட்டி.
2. பிள்ளைகள் ஆஜர் பட்டி.
3. உபாத்தியாயர் ஆஜர்பட்டி.
4. பரிக்ஷாதிகாரிகள் குறிப்புப் புஸ்தகம்.
5. இதர உத்தியோகஸ்தர்கள் பார்வையிட்டுக் குறிப்பெழுதும் புஸ்தகம்.
6. மாணாக்கர்கள் நடத்தை தேர்ச்சி ரிஜிஸ்டர்.
7. சாமான் ஜாப்தா (எ) கவர்ன்மெண்டு கிராண்டிலிருந்து வாங்கியவை. பி. மானேஜர் சொந்த நிதியிலிருந்து சப்ளை செய்தவை.
8. கடிதப் போக்கு வரத்து ரிஜிஸ்டர்.
9. சம்பளப்பட்டி. சம்பளம் பட்டுவாடா ரிஜிஸ்டர்.
10. பிள்ளைகளின் சென்ஸஸ் கணக்கு.
11. மாதாந்திர கணக்கு நகல்.
12. மார்க்கு ரிஜிஸ்டர்.
13. பிற்கால க்ஷேமநிதிக் கணக்கு.
14. உபகாரச் சம்பளம் பெற்று படிப்போர் விஷயம் வைக்கவேண்டிய கணக்கு.
15. தலைமை அவ்வப்போது தன் உதவிகட்கு கொடுத்துவரும் உத்திரவு புஸ்தகம்.

இங்கு எடுத்துக்காட்டியவைகள் எல்லாம் பிரதிபாடசாலையிலும் இருக்கவேண்டியது அவசியம் எனக் கூறுவிடினும், பிரதம பாடசாலைகளில் இவைகளைக் காணலாம். என்றும், இவை இருப்பின் நலமென்றும் எடுத்துக் கூறலாம். முக்கியமான ரிஜிஸ்டர்கள் எவை என்பதைப் பற்றியும், எவ்வித பாடசாலைகளில் அவை அவசியமென்பதைப் பற்றியும், ஆங்காங்கு எடுத்துக் கூறுவாம்.

## 1. பிள்ளைகளின் சேர்க்கை விடுதலைப்பட்டி.

தலைப்பு 1:—பிள்ளைகள் சேருங்கால் வரிசைக் கிரமமாகக் குறிக்கும் நெம்பர்; இதுவே தான் பிள்ளைகளிட ஆஜர்பட்டியில் சேர்க்கை நெம்பர் எனக் குறித்திருப்பது. ஒரு சிறுவன் பாடசாலையில் கொஞ்சநாள் படித்து விட்டு விட்டு, மறுபடி சேர்க்கப்பட்டால் அவனுக்குப் புதிய நெம்பர் கொடுப்பதோடுகூட. 16-வது கலத்தில் முன் நெம்பரையும் குறிப்பிடவும்.

2. மாணுக்கரின் பெயரைத் தெளிவாக எழுதவும். பையனிட முழுப் பெயர் ஒன்றும் அழைப்பது மற்றொன்றுமா யிருந்தால்; அதையும் விவரமாக எழுதவும். பதிவு செய்தபின் மாணுக்கரின் பெயர் மாற்றப்பட்டிருந்தால், மாறிய தேதியோடு பெயரையும் எழுதவும். ஷரா என்ற கலத்தில் காரணம் காட்டவும். இங்கு என்ன பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ அதே பெயரை ஆஜர் பட்டியிலும் மற்றுமுள்ள ரிஜிஸ்டர்களிலும் பதியவும். பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்குமுன் பெற்றோர் அறிக்கை விண்ணப்பம்பெற்று சேர்த்தல் நலம்.

3. மாணுக்கரின் சொந்த ஊர் எதுவோ அதையே இங்கு எழுதவும். ஐந்தாவது தலைப்பில் குடியிருக்கும் ஊர் என்றதும், இதுவும் ஒன்றானால், அதிலேயே இதை எழுதிவிடலாம்; இங்கு ஒன்றும் எழுத வேண்டியதில்லை. சில மாணுக்கர்கட்குப் பெற்றோர் ஊர், தம் பெயர் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கலாம். அவ்விதம் ஒரே பெயருள்ள இரண்டு மாணுக்கரின் வித்தியாசம் அறிய வீட்டுப்பெயர் எனக் கொடுப்பதுண்டு. கிராமங்களில் இன்றைக்கும் இது வழக்கத்தில் இருந்து வருகிறது. உ-ம். புதூரான், காட்டூரான், மெத்தைவீட்டுக்காரன். ஒரே பெயருள்ள பையன்கள் இன்றேல் அறியவே இத்தலைப்பு முக்கியமாக உபயோகப்படுத்துவது

4. போஷகர் அல்லது பெற்றோர் பெயரைக் குறிக்கவும்.

5. பாடசாலையில் படிக்குங்கால் இருந்து வரும் ஊரின் பெயரைக் குறிக்கவும்.

6. பெற்றோர் அல்லது போஷகரின் தொழிலை இங்கு எழுதவும். கானிஷ்மாரிக் கணக்கில் கொடுத்திருக்கும் விவரப்படி கொடுத்தல் நலம். போஷகருக்கு இரண்டு மூன்று தொழில் இருந்தால் முக்கிய தொழிலையே குறிக்கவும்.

7. மாணுக்கர்கள் சேர்ந்த தேதியை எழுதவும். ரிஜிஸ்டர்களைப் புதுப்பித்து எழுதும் பொழுது சிலர் சேர்ந்த தேதிக் கிரமமாகப் பிள்ளைகளின் பெயரை எழுதாமல், முன்பின்னாக எழுதிவிடுகிறார்கள். உதாரணமாக 1930 வருஷம் சேர்ந்தவன் சேர்க்கை நெம்பர் 1 எனவும், 1928ல் சேர்ந்தவன் நெம்பர் 2 எனவும் காண்கிறோம். இது தப்பிதம் என்று கூறவும் வேண்டுமோ. ரிஜிஸ்டர்களின் பதிவுகள் அவ்வப்போது செய்யாததாலும், பதிவுகளைப் பெயர்த்தெழுதுங்கால் வகுப்புவாரியாகப் பிள்ளைகளின் பெயரைச் சேர்க்கையில் எழுதிவிடுவதாலும் இந்த ஒழுங்கீனம் ஏற்படுகிறது.

8. மாணுக்கர்கள் பிறந்த வருஷம் மாதம் தேதி இவைகளை நன்கு விசாரித்துப் பதிவுகள் செய்யவும். பெற்றோர் அறிக்கைப் பத்திரத்தில் இதுவும் கண்டிருக்கும். கிராமங்களில் தமிழ் வருஷம் மாதம் தேதி குறித்திருந்தால் 'ஜந்திரி' என்னும் பஞ்சாங்கத்தைப் பார்த்து, ஆங்கிலதேதி குறிக்கவும்; வருஷம் மாதம் தெரிந்தாலும், தெரிந்த விஷயத்தையே எழுதவும். இங்கு குறித்த தேதியை எவ்வித காரணத்தைக்கொண்டும் மாற்றுதல்கூடாது. ரிஜிஸ்டரில் பதிவு செய்த தேதியைப் பெற்றோர் மாற்றவேண்டுமென விரும்பினால், தகுந்த ஆதாரங்கள் கொண்டு ருசுபடுத்தும்படி செய்து மேலதிகாரிகளுக்கு எழுதி உத்திரவு பெறல்வேண்டும். கிராமத்தில் பதிவு செய்துவரும் ஜெனன மரணம் கணக்கு இதற்கு ஒரு போதிய ஆதாரமாகக் கொள்ளலாம்.

9. அம்மை குத்தாமலும், வார்க்காமலும் உள்ள பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கக் கூடாதென்ற சட்டம் உண்டு. அதை மீறி பிள்ளைகள் சேர்க்கப்பட்டிருந்தால், பாடசாலையின் அங்கீகாரம் ரத்து செய்ய ஒரு காரணமாக ஏற்படும். அம்மைப்பால் வைக்காத சில மாதங்களில் பிள்ளைகள் சேர்க்கப்பட்டு அதில் யாருக்காவது அம்மை குத்தப்பட்டது சந்தேகத்திற்கிடங் கொடுக்குமாயின், அம்மை வைப்போர் வந்தவுடன் அம்மை குத்தும்படி பார்க்கவும். அம்மை குத்தப்பட்டதாயிருந்தால் 'குத்தப்பட்டது', என்றும் வார்க்கப் பட்டதாயிருந்தால் 'வார்த்தது' எனவும் இரண்டும் இல்லையாயின் 'இல்லை', எனவும் எழுதி விடலாம். குத்தப்படாதவர்கட்கு எந்த காலத்தில் மறுபடி குத்தப்பட்டதோ அந்த தேதியை 'ஷராவில்' குறிக்கலாம்.

10. மாணுக்கர்கள் அனுசரித்து வரும் மதத்தையே இக்கலத்தில் குறிக்கவும்.

11. கானிஷ்மாரிக் கணக்கில் விவரித்திருக்கிறபடி எந்த ஜாதியைச் சார்ந்தவர் எனக் கூறுகிறார்களோ, அதையே, எழுதவும். ஒரு பையனுடைய ஜாதி மதம் மத்தியில் மாறி விட்டால், மாறிய ஜாதி மதம் குறிப்பதுடன் தேதியையும் குறிக்க வேண்டும்.

12. மாணுக்கர்கள் சேருங்கால் எந்த வகுப்பில் படிக்கத் தகுந்தவர்கள் என்று தலைமை உபாத்தியாயர் கருதுகிறாரோ, அவ்வகுப்பையே இங்கு குறிப்பிடவும்.

13. ஒரு ~~சிறுமி~~ சிறுவன் பாடசாலையை விட்டு நீங்குங்கால் சேர்க்கை விடுதலை ரிஜிஸ்டரை எடுத்து அதில் அப்பையனுக்கு நேரில் இந்தத் தலைப்பில் அவன் அப்பொழுது படித்து வந்த வகுப்பைக் குறிக்க.

14. அவன் எந்த தேதியில் விட்டு நீங்கினானோ அந்த தேதியைக் குறிக்கவும்.

(தொடரும்)

---

லிட்டில் ஹெயில்ஸ் துரையவர்கள பிரசங்கம்·

தற்போது கல்வி இலாகா அதிகாரிகளால் அமைக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களும், கையாளப்பட்டுவரும் முறைகளும், நம்நாட்டு மக்களுக்கு எத்தகைய பயனும் அளிப்பதில்லையென்பதாக பல பட்டமளிப்பு விழாக்களிலும், கல்வி விழாக்களிலும், மேடைகளிலும், அநேக பிரசங்கங்கள் நடந்துவருகின்றன. சென்னை கல்வி இலாகாத் தலைவரான லிட்டில் ஹேல்ஸ் என்பவர் சென்ற அக்டோபர்மீ அண்ணாமலை சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவில் இவ்வுண்மையை நன்றாக விளக்கி இருப்பதாக தெரிகிறது. ஆங்கிலக் கல்வியைப் போதிப்பவர்கள் தங்களை மேதாவிகள் என்றும், கல்வியற்ற கிராமவாசிகளை இழிந்தவர்கள் என்றும் கருதிக்கொள்வது, தவறு என்று லிட்டில் ஹேல்ஸ் விளக்கி யுள்ளார். அநேக விஷயங்களில் ஆங்கிலக் கல்வி கற்றவரைவிடச் சாமானிய மனிதரே அறிவுக்கூர்மை காட்டி யிருக்கின்றனர் என்பதற்குப், பல உதாரணங்கள் உண்டு என்று இவர் கூறினார். உழவுத்தொழிலை வெற்றியுடன் நடத்துபவர்கள் பல விஷயங்களைக் கற்றறிந்தவர்களைவிட விசேஷ நன்மை செய்கிறார்கள் என்று இவர் தெரிவித்தார். இதனால் தற்காலக்கல்வி முறையானது படித்தவர்களை அனுபவ முறையினின்றும் பிரித்து வைத்துவிடுகிறது எனனும் உண்மையை ஊகித்தறியலாம். பிறமொழி வாயிலாகக் கற்பிக்கப்படும் கல்வி சரியான பயன் அளிப்பதில்லை. தற்காலக் கல்வி பழைய கல்வி முறைகளை அடியுடன் மாற்றிவிட்டது இந்நவீனக் கல்வி விவசாயி கட்கோ அல்லது கிராமவாசிகட்கோ எத்தகைய நன்மையும் செய்வதில்லை, என்று லிட்டில் ஹேல்ஸ் கூறியது உயர்வு நவிற்சி அல்ல-உண்மையேயாகும். நாட்டுமொழிகளின் வாயிலாக அறிவு படைத்தவர்கட்கும், ஆங்கிலக் கல்வி கற்றவர்கட்கு மிடையில பெரிய பள்ளம் விழுந்து கிடக்கிறது. அண்ணாமலை சர்வகலாசாலை ஓரளவு நாட்டு மொழிகட்கு முதன்மை கொடுத்து வருகிறது. ஆனல் எல்லா வித்தைகளையும் நாட்டுமொழி வாயிலாகக் கற்பிக்க ஏற்பாடு செய்தாலன்றித் தக்க பயன் எதிர்பார்க்க முடியாது. கல்வி இலாகாத்தலைவராகிய லிட்டில் ஹேல்ஸ் அவர்களே தற்கால கல்வி முறையைக் குறித்து இவ்வாறு அபிப்பிராயம் தெரிவிப்பதால் இதில் ஏதோ பெரிய குறை உண்டு என்பதை ஒவ்வொருவரும், உறுதியாக நம்பவேண்டும். இக்காலத்தில் தற்காலக்கல்வி முறையில் குறைகள் உண்டு என்று தெரிவிப்போரின் தொகை வளர்கிறதேயொழியக் இப்பெருங் குறையை நீக்கி சீர்படுத்த முன்வரும் கனவான்கள் ஒருவரும் கிடையாது.

# ஆசிரியர் பகுதி

## உபாத்தியாயரின் வேலையும், வாழ்க்கையும்.

(கே. பி. சேஷாத்திரி ஐயங்கார், எழுதியது.)

அநேகருக்கு உபாத்தியாயருடைய வேலை யின்னது என்பதே தெரிய வராது. பிள்ளைகளுக்குக் கொஞ்சமும் சிரமங் கொடுக்காமல் எல்லா விஷயங்களையும் தாமே சொல்லிக் கொடுப்பதென்று சிலர் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறு. இன்னும் சிலர் பிள்ளைகளின் பாடங்களைத் தமக்குக் குறிப்பிட்ட காலத்தில் ஒப்புவித்துக் கொள்வதுதான் தங்கள் வேலை யென்று எண்ணி நடக்கிறார்கள். இதுவும் பிசகே. வாசிக்கவும், எழுதவும், கணக்குப்போடவும் யார் சொல்லித் தருகிறார்களோ, அவர்கள் உபாத்தியாயர்கள் என்று நினைக்கக்கூடாது. எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பது உபாத்தியாயர் கிரமமாய் செய்யவேண்டிய வேலையில் ஓர் அணுவங்குச் சமானம். பிள்ளைகளின் மனதைப் பயிற்சி செய்து அவர்களுடைய மனோ தத்துவங்களை விருத்தி பண்ணி நன்னடக்கைகளை அவர்கள் பின் பற்றும்படி செய்து அவர்களிடத்தில் சத் குணங்களை யுண்டாக்கி எந்த விஷயத்தைக் குறித்தும், தாங்களே சிந்தித்து தகுந்தபடி செய்யும் ஆற்றலை அவர்களிடத்தில் ஏற்படுத்தி இன்னமும் அவர்களை ஈன்றவர்களுக்கும், சார்ந்தவர்களுக்கும் சந்தோஷத்தையும், கௌரவத்தையும் கொடுக்க என்ன லக்ஷணங்கள் இன்றியமையாதனவோ அவற்றையெல்லாம் உண்டாக்கவல்லவர் யாரோ அவர்தான் “உபாத்தியாயர்” “போதகர்” என்ற பெயர்களுக்கு அருகராவர். மற்றவர்களெல்லாம் அப்பெயர்களுக்கு அபாத்திரர்களே. ஒருவனைக் கண்யமுள்ள ஆளாக்க என்ன வேண்டுமோ அதைச் செய்பவருக்கு அப்பெயர் தகும். இது மிகவும் கடினமான வேலை. அத்தகைய வேலையில் புகுந்து கீர்த்திபெற வேண்டுமென்று முயலுகிறவர்களைப்பற்றி நாம் மிகவும் பெருமை பாராட்ட வேண்டும். இதில் கீர்த்தி பெற இடமிருந்த போதிலும் சிலர் உபாத்திமைத் தொழிலில் பிரவேசிக்க இஷ்டப்படுவதில்லை.

அதற்குச் சில முக்கிய காரணங்கள்:— உபாத்திமைத் தொழிலில் புகுந்தால் உடம்பு கெட்டுப்போகுமென்பது சிலருடைய ஆட்சேபம். காலை முதல் மாலை வரையில் கத்திக்கத்தித் தீர்க்கவேண்டியதே உபாத்தியாயரின் வேலை யென்றும், அதனால் பற்பல நோய்கள் உண்டாகும் என்றும் எண்ணுகின்றார்கள். அவர்கள் அவ்வண்ணம் நினைத்தற்குக் காரணம் உபாத்திமையின் தன்மையை உணராமையே யாகும். பள்ளிக்கூடத்தில், காலை முதல், சாயங்காலம் வரையில் ஓரே கத்தலாய் கத்திக் கொண்டிருந்தால் உடம்புகெட்டுப்போகும் என்பது உண்மையே. பிள்ளைகளையே ஆராய்ந்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளும்படிச் செய்வது உபாத்தியாயர் கடமையாதலால் இந்த வேலையின் சிரமம் உபாத்தியாயருக்கும், பிள்ளைகளுக்கும் சமமாயிருக்கும். சிறுபிள்ளைகள் படுகிற அவ்வளவு சிரமம், உபாத்தியாயர் பட்டால் அதனால் உடம்பு கெட்டுப்போகுமா?

மற்றைய தொழில்களுக்கும் உபாத்திமைக்குமுள்ள வித்தியாசங்கள்:— மற்றைய தொழிலி லுள்ளவர்களைக் காட்டிலும் உபாத்தியாயருக்கு வேலை அதிகமில்லை உபாத்தியாயருடைய வேலை யெல்லாம் ஐந்து மணி நேரத்துக்கு அதிகம் கிடையாது அதனிடையில் ஓய்வு நேரமு மிருக்கின்றது. வர்த்தகர்களுக்குக் காலை முதல் இரவு பத்துமணி வரையிலும் வேலைதான். வைத்தியர்களுக்கும், வக்கீல்களுக்கும் சதா வேலை தான். பொழுது விடிந்தது முதல் அர்த்த ராத்திரி வரையிலும் கடையில் உட்கார்ந்து கொண்டு வந்தவர்களுக்கு விலை கூறி மனங்களிக்கும்படிப் பேசி சரக்குகளின் குணத்தைப் புகழ்ந்து வாங்கும்படி செய்வதிலும்; வந்தபோதெல்லாம் கக்ஷிக்காரருடன் பேசிப் பேசி விஷயங்களைத் தெரிந்து கொண்டு கோர்ட்டுக்குப்போய் விஷயங்களை எடுத்து வாதிக்கும் வக்கீல்கள் பேசுவதிலும் உபாத்தியாயர் பேசவேண்டியது அதிகமா யிருக்குமா? அல்லது இராத்திரி யென்றும், பகலென்றும், வெயி லென்றும், மழை யென்றும் பாராமல் கூப்பிட்டபோதெல்லாம் போய் நோயாளியைப் பார்த்து மருந்து கொடுக்கும் வைத்தியர்களைப் பார்க்கிலும் உபாத்தியாயருக்குச் சரீர சிரமம் அதிகமா? மற்றைய வேலையிலிருப்பவருக்கு ஓய்வு கிடையாது. உபாத்தியாயர்களுக்கோ, கோடை, மாரி இக்காலங்களில் பெரிய விடுமுறைகள். தவிர வாரா வாரம் இரண்டு நாள் விடுமுறையும். பண்டிகை முதலிய விடுமுறையும் அதிகம். ஒருகால் அவர்கள் வேலையினால் ஏதேனும் சிரமமடைந்த போதிலும் அதைத் தீர்த்துக் கொள்ள நிரம்ப அவகாசமிருக்கின்றது. ஆகையால், உபாத்திமைத் தொழிலில் உடம்புக்குக் கெடுதியையுண்டு பண்ணும் என்பது தப்பான அபிப்பிராயம்.

இன்னும், அநேகருக்கு உபாத்திமைத் தொழில் கௌரவமானதாகத் தோற்றவில்லை. இதுவும் தவறுதலான எண்ணமேயாகும். சிலர் அந்த வேலையை இகழவும் இகழ்கின்றார்கள். என்னடா போயும் போயும் வாத்தியார் வேலையா? எவ்வளவோ படித்துக் கடைசியில் வாத்தியாராகவா போனாய்? வேறு எங்கேயும் உனக்கு வேலை கிடைக்கவில்லையா? என்று மிக்க இழிவாகப் பேசுகின்றனர். மற்ற வேலைகளைப் பார்க்கிலும் இத்தொழிலில் தான் மேன்மையதிகம் ஒருவனை இம்மை மறுமையிரண்டிலும் கீர்த்தி பெறக் கூடியவனாக்குகின்ற வேலையைப் பார்க்கிலும் சிறந்தது வேறொன்று மில்லை. வக்கீல்களுக்கு ஒரு பெரிய கேஸை ஜயித்து விட்டால் உடனே கீர்த்தி வந்து விடும் அநேகமாதிரி கடினமான வியாதியை அநுகூலமாக்கினால் உடனே வைத்தியன் பெயர் எல்லோருக்கும் தெரிந்து போகும். உபாத்தியாயர் சங்கதி யப்படி யல்ல, அவர் செய்யும் வேலையின் பயன் நாட்பட நாட்படத்தான் தெரியும். பாமர ஜனங்கள் உபாத்தியாயரின் அருமை தெரியாமல் மற்றவர்களையே கொண்டாடுகின்றார்கள். இதனால் அனேகர் பிரமித்துப்போகின்றார்கள். உபாத்தியாயரின் அருமை கற்றறிந்தோர்கட்கு மட்டுந்தான் தெரியும். அவர்கள் இந்தத் தொழிலைப் போல் மேம்பாடுற்ற தொழில் வேறுகிடையாதென்றும் “உபாத்தியாரிடம் தான் தேசத்தின் முன்னேற்றமும், மதத்தின் மாண்பும் தங்கியிருக்கின்றன” என்றும் கொண்டாடுகின்றார்கள். ஆயிரம் பாமரர்கள் புகழ்வதைக்காட்டிலும் கல்வி கற்ற ஒரு பண்டிதன் புகழ்வது பெரிது. ஆகையால், உபாத்தியாயர்கள் சந்தேகிக்க வேண்டியதில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா இந்நாடுகளில் பெரிய கிரந்தங்கள் எழுதுவோர்கள் உபாத்தியாயர்களே. அவர்களுடைய கீர்த்திக்கு ஒரு நாளும் குறைவில்லை. இந்தியாவிலும் கூட ஆதியில் உபாத்தியாயர்களா யிருந்தவர்களே, பிறகு பெரிய பெரிய நிலைமைக்கு வந்திருக்கின்றார்கள். உலகமே போற்றும் புகழுடையார் ரவீந்த நாத் கவீந்திரரும்; ஸர். ஸி. வி. ராமன் என்பவரும் இவ் விருவர்கள் நோபல் பிரைஸ் என்ற பெரிய பரிசைப் பெற்றவர்கள். இது போல நாம் ஆரம்பத்தில் உபாத்தியாயராக விருந்து அதன் பிறகு மேம்பாடான பதவியை அடைந்தவர்களின் பெயர்களை அடுக்கிட்டுச் சொல்லலாம்.

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் தன் ஜீவிய தசையில் ஏராளமாகப் பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆவலுடையவர்களாகவே இருக்கின்றார்கள். பணமுள்ளவர்

கள் தான் இக்காலத்தில் ஒரு மாதிரியாகக் கௌரவத்தை யடைகின்றார்கள். உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டவர்களுக்குச் சம்பளம் கொஞ்சம் என்று எண்ணுகின்றார்கள். இஃது உண்மையே.

உபாத்திமைத் தொழிலில் பிரவேசிக்கிறவர்களின் குணம் சீக்கிரத்தில் மாறிப்போகிறதென்று சிலர் சொல்லலாம். புத்தியற்ற பிள்ளைகளுடன் நாள் முழுவதும் உழைத்தும் என்னபாடுபட்டு சொல்லிக் கொடுத்தும் தெரிந்துகொள்ளக் கூடாமை கண்டு கோபதாரிகளாகி விடுவார்களென்பதும், தாம் பள்ளிக்கூடத்தில் சுயாதிகாரம் செலுத்துவோராகையால் வெளியில் மற்றவர்களிடத்தில் சம்பாஷிக்கும் போதும் அலட்சியத்துடனும் கர்வத்துடனும் நமக்கு மிஞ்சினவர்களில்லை என்பதும், வாச்சாதுர்யத்திலும், போதனா முறையிலும் மேலானவர்கள் கிடையாதென்ற மனப்பால் குடித்து மமதையுடனிருப்பார்களென்பதும் சிலர் கருத்து. உபாத்தியாயர் ஒருவருடனும் கலக்காமல் பள்ளிக்கூடமுண்டு, தானுண்டு என்றிருந்தால் அப்படி குணம்மாறிப்போகும் என்பதற்குத் தடையில்லை. ஆனால் மேலும் மேலும் படித்துக் கொண்டும் தம்மிலும் பெரியோர்களுடன் பழகிக்கொண்டும் இதர விஷயங்களில் கலந்து கொண்டும் இருந்து வருவார்களானால் மேற் சொல்லிய கெடுதி நேரிடாது.

உபாத்திமைத் தொழிலிலுள்ள சில அனுகூலங்கள்—உபாத்தியாயருக்கும் குறிப்பிட்ட காலப்படி தான் வேலை. அதாவது சுமார் காலை பத்து மணி முதல் மாலை ஐந்துமணி வரையில் தான் வேலை. அதற்கு முன்னும், பின்னும் தம் காலத்தை அவரிஷ்டப்படி கழித்துக் கொள்ளலாம். மற்றவர்கள் சங்கதி அப்படியல்ல. வர்த்தகர்கள், வக்கீல்கள் இவர்களுக்கு நாள் முழுதும் வேலையில்லாமற் போனாலும் யாராவது வரக்கூடும் என்ற எண்ணத்தால் சதா காத்துக் கொண்டிருக்க வேண்டுமே யொழிய தமக்கிஷ்டமான வேறு வேலையில் பிரவேசிக்க முடியாது. இன்னம் சில வேலைகளில் இரவு பகல் ஓய்வில்லை. உபாத்தியாயருக்கு மாத்திரம் சௌகர்யம் அதிகம். அவருக்கிருக்கும், அவகாசத்தைத் தம் தேகப்பயிற்சிலும் மற்ற விஷயங்களிலும் கழித்துச் சுகமாயிருக்கலாம்.

லஞ்சம் வாங்குகிறது முதலிய தப்புக் காரியங்களுக்கு இதில் இடமேயில்லை. தமக்குத் தெரிந்ததைத் தம்மால் கூடிய மட்டில் சொல்லுவிப்பதைத் தவிர பிசகு செய்ய அவசியமில்லை. சாவகாசம் அதிகமாயிருக்கிறபடியால் மேன்மேலும் படித்து ஞான விர்த்தி செய்து கொள்ள இடமுண்டு. மற்றைய வேலையிலிருப்பவர்களுக்கு அதைப் பற்றிய கவலையேமேலிட்டிருக்குமே யொழிய புதிய சங்கதிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள காலமிராது. உபாத்தியாயர்களுக்கு சாவகாசமிருப்பதுடன் படித்துக் கொண்டேயிருப்பது அவர் வேலைக்கு மிக்க அவசியமாகையால் அவர் ஞானவிர்த்தி யடைவதில் ஒரு தடையுமில்லை.

பிறர்க்குச் சொல்லிக் கொடுப்பதனால் நமக்குத் தெளிவுண்டாகும். நாமே வாசித்துக் கொண்டு போகும்போது எல்லாந் தெரிந்துவிட்டாற் போலத் தான் தோன்றும். பிறருக்குத் தெளிவிடும் பொருட்டு நாம் நம்முடைய சந்தேகங்களெல்லாம் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் தான் புத்தி தெளிவடையும்.

உபாத்தியாயர் வேலை முழுவதும் பிறருக்கு நன்மை செய்வதே. ஏற்கனவே, குறித்தபடி பிள்ளைகளுடைய மனம், தேகம், நடத்தை இவைகளைச் சீர்திருத்தி, பிரபஞ்சத்தில் சத்காரியங்கள் செய்யும்படி அவர்களை ஆளாக்குவதைப் பார்க்கிலும் ஒருவன் செய்யக் கூடிய தேசோபகாரம் வேறு என்ன இருக்கிறது?

# சேலம் ஜில்லா

## ஆசிரிய மானேஜர்களின், (முதல் மகா நாடு)

என். வெங்கடரமணன், ஆசிரிய மானேஜர், சேலம்.

1933௵ மார்ச்சு௴ 18-ம்தேதி காலை 8-மணிக்கு சேலம் நகரத்தில் பந்தல்களிட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்த சேலம் ஜில்லா போர்டுக்குச் சொந்தமான "போக்ஸ்" மண்டபத்தில் ஸ்ரீமதி பீகம் சுல்தான் மீர் அமிருத்தீன். பி. ஏ. (ஹானர்ஸ்) அவர்களின் தலைமையில் ஒரு மகாநாடு கூடிற்று. அது காலை இந்த ஜில்லாவின் பல விடங்களினின்றும் பிரதிநிதிகளும், விசிட்டர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். வெளியூர்களினின்றும் புத்தகப் பிரசுர கர்த்தர்களின் ஏஜெண்டுகள் பலர், மகாநாட்டுக்கென தங்கள் தங்கள் புத்தகங்களைக் கொணர்ந்து மகாநாட்டு மண்டபத்தைச் சுற்றிலும் அமைத்து, அழகிய கண் காக்ஷிகளை ஏற்படுத்தி யிருந்தனர். ஆரம்பத்தில் சிறுவர்களால் கடவுள் துதிப் பாட்டுகள் பாடப்பட்டவுடன் மகா நாடு ஆரம்பமாயிற்று. முதலில் இந்த ஜில்லாவின் கல்வியதிகாரியும், பற்பலமொழிகளில் வல்லுனரும், சிறந்த நூலாசிரியரும் ஆகிய திருவாளர். டி. பி. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ., பி.எல். அவர்கள் மகா நாட்டைத் திறந்து வைக்கும் முகத்தால் ஆங்கிலத்தில் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அஃது அச்சிட்டு சபையில் வழங்கப்பட்டது. பின்னர் மகா நாட்டு வரவேற்புச் சங்கத் தலைவராகிய ராவ்சாஹிப். எஸ் பி. இராஜமாணிக்கப் பண்டாரம் அவர்கள் மகாநாட்டுத் தலைவரையும், பிரதிநிதிகளையும் வரவேற்கும் முறையில் ஆசிரிய மானேஜர்களின் நிலைமையையும், அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டிய முறைகளையும் நன்கு ஆங்கிலத்தில் அருமையாகப் பிரசங்கித்தார்கள். அவ்வுரையும் அச்சிடப்பட்டு மகா நாட்டில் வழங்கப்பட்டது. பின்னர் மகா நாட்டுத் தலைவியாரவர்கள் அக்கிராசனத் தமர்ந்து, தமது தலைமைப் பேருரையை (அக்கிராசனப் பிரசங்கத்தை) ஆங்கிலத்தில் வாய் மொழியாக சொல்நயம், பொருள் நயம் வாய்ந்த நடையில், கல்வியபிவிருத்தியில் கவனங்கொண்ட பலரும் அறியவேண்டிய கருத்துக்கள் பலவற்றை விளக்கியுபந்நியசித்தார்கள். (இத்தலைவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்குகளின் தமிழ்ச் சுருக்கம் பின்னால் இப்பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும்.) அதன் பின் கல்வி சம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி அறிஞர் பலர் சிறந்த கட்டுரைகளை எழுதிக் கொணர்ந்து மகா நாட்டில் படித்துப் பிரசங்கித்தனர். அதாவது செவ்வாய்பேட்டை கோகுல நாத ஹைஸ்கூல் மானேஜராகிய, வக்கீல் திருவாளர், எல். பி. வீரராகவாச்சாரியாரவர்கள் "பாடசாலையில் நல்லொழுக்கம் போதித்தல்" என்பதைப் பற்றியும், சேலம் ரேஞ்சு டிப்டி இனிஸ்பெக்டர் திருவாளர், எம். வி. வாசுதேவ ராவ் பி. ஏ., எல். டி. அவர்கள் "பள்ளிக் கூட திட்டத்திற்கு அதிகப்பட்ட முயற்சிகள்" என்பதைப் பற்றியும் (திரு. வாசுதேவ ராவ் அவர்கள் நேரில் வரமுடியாமற் போனதால் அவர்களுடைய பிரசங்கத்தை திரு. லக்ஷ்மீ நாராயணய்யர் பி.ஏ எல்.டி, அவர்கள் படித்தார்கள்.) திரு, என். வேங்கடரமணன் அவர்கள் "பெற்றோர்களின் ஒற்றுழைப்பு" என்பதைப் பற்றியும், திரு, ஆதிநாராயணய்யரவர்கள், கிராம புனருத்தாரணம்" என்பதைப்பற்றியும், சேலம் டிரெய்னிங் ஸ்கூல் தலைமை யாசிரியர் திரு. வி. நடராஜன் பி. ஏ., எல். டி. அவர்கள் "மாணவர்களின் மனோதத்துவத்தை யறிந்து பயிலும் போதனா முயற்சி" என்பதைப் பற்றியும், திரு, நடராஜன் அவர்கள் வேறு வேலையினிமித்தம் மகா

நாட்டுக்கு வரமுடியாமற் போனதால் அவர்களுடைய பிரசங்கத்தை திரு, இராஜா துரை அவர்கள் படித்தார். லண்டன் மிஷன் ஹைஸ்கூல் ஆசிரியர் திரு, ஆர், நாக ராஜராவ் பி. ஏ. எல். டி. அவர்கள் "பாடசாலையின் ஒழுங்கு" என்பதைப் பற்றியும் (சிலர் ஆங்கிலத்திலும், சிலர் தமிழிலுமாக) பிரசங்கங்கள் புரிந்தனர். பின்னர் சங்கக் காரியதரிசி யவர்களால் ஜில்லா ஆசிரிய மானேஜர்களின் சங்கத்தின் சார்பாகத் "தமிழ்த் தாய்" என்ற பெயரால் ஒரு மாதப் பத்திரிகை வெளியிடவேண்டுவதன் அவசியத்தைப் பற்றிக்கூறி, அப்பத்திரிகையை யாவரும் ஆதரிக்க வேண்டுமென்ற" விண்ணப்ப மொன்று சபையில் வாசித்துக் காட்டப்பட்டு, அதன் பிரதிகள் யாவருக்கும் வழங்கப்பட்டன. அத்துடன் மகாநாட்டுத் தலைவி யவர்கள் முற்பகல் கூடிய மகா நாட்டை முடிவடையச் செய்து, தமது பின்னுரையாகச் சில அரிய உரைகளை வழங்கினர். அதன் மீது மிஸ்டர். ரெவரெண்ட் ஹாட்ச் துரையவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்றுக் காலை மகா நாடு முடிவடைந்தது. சாப்பாட்டுக்குப் பின்னர் பிற்பகல் 3-மணிக்கு வரவேற்புச் சங்கத்தலைவராகிய திரு, ராவ் சாஹிப் எஸ். பி. இராஜ மாணிக்கப் பண்டாரம் அவர்களின் தலைமையின் கிழ் மீண்டும் மஹா நாடு ஆரம்ப மாயிற்று. அதுகாலையில் காலையில் நடைபெற்ற உபந்நியாசங்களைப் பற்றிய விமர்சன விவாதங்கள் நடைபெற்றன. அவற்றைத் தொடர்ந்தாற்போல் கீழே குறித்த தீர்மானங்கள் முறையே பிரதிநிதிகளால் பிரேரேபிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் விவாதிக்கப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன. தீர்மான விவாதங்களில் கலந்து கொண்டவர்களில் ஸ்ரீமான்களான சி. ஆர். வீரராகவாச்சாரியார், எஸ். ஆர். இரகு நாதய்யங்கார், என். வேங்கடரமணன், வி. கிருஷ்ணய்யர், எஸ். ஆர். பொன்னுசாமய்யா, அ. பாஷ்ய கார்லு முதலியோர் முக்கிய மாவர். மற்றும் பல அங்கத்தினர்கள் தீர்மானங்களில் அக்கறைகாட்டி விவாதித்தமைபாராட்டற்பாலதாகும். உபந்நியாசகர்களுக்கும் காரியதரிசியால் மலர் மாலைகள் சூட்டப்பட்டு, என். வேங்கிடரமணன் அவர்களால் யாவருக்கும் வந்தனோ பசாரங்கள் கூறப்பெற்றதும் மகாநாடு இனிது முடிவடைந்தது. அதன் பின் தலைவர்களுக்கும் உபந்நியாசகர்களுக்கும் சிற்றுண்டி (டீபார்ட்டி) வழங்கப்பட்டபின், குரூப் போட்டோ எடுக்கப்பட்டது.

## மகா நாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்கள்.

1. சேலம் ஜில்லா கல்விச் சபையில் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிஸிபல் சபை, மிஷனரிச் சங்கம் முதலிய வற்றின் பள்ளிக்கூடங்களின் தொகையின் விகிதத்திற் கேற்ப டை சங்க அங்கத்திர்களுக்கு இடமளித்திருப்பதற் கேற்றபடி, பிரைவேட் மானேஜ்மெண்டுகளுக்குட்பட்ட பாடசாலைகளின் பெருக்கத்திற் கேற்றபடி ஆசிரிய மானேஜர்களுக்கும் அதிக ஸ்தானங்கள் கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

2. ஸ்திரமாயும் ஒழுங்காயும் நடைபெற்று வரும் மிஷனல்லாத எய்டெட் பாடசாலைகளுக்கு பணக் கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டு 6 மாதங்களுக்கு ஒரு முறை கிராண்டு அளிக்கப்பட வேண்டு மென்று ஜில்லா கல்விச்சபை கேட்டுக் கொள்ளுகிறது.

3. மூன்று வருஷங்களாக இஜ் ஜில்லாவிலுள்ள பாடசாலைகளுக்கு கொடுக்க வேண்டிய கிராண்ட் தொகையில் நூற்றுக்கு 5-லிருந்து 15-வரையில் குறைத்துப் பிடித்தம் செய்துள்ள கிராண்டை சேர்த்து இவ்வாண்டில் கொடுத்து விட வேண்டு மென்றும், இனியும் அவ்வாறு கிராண்டைக் குறைக்காமல் கொடுத்துவர வேண்டுமென்றும் துரைத்தனத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. பஞ்சாயத்து ஸ்கூல்களுக்குக் கொடுத்து வருவதைப் போலவே எய்டெட பாடசாலைகளுக்கும் பர்னிசர்களை வாங்குவதற்கு முழு கிராண்டு கொடுத்துதவ வேண்டுமென்று கவர்ன் மெண்டை கேட்டுக் கொள்ளுகிறது.



5. ஆசிரிய மானேஜர்களுக்கு வருங்கால புதிய அரசியல் சீர்திருத்தத்தில் ஓட்டுரிமை யளிக்கப்படவேண்டு மென்று கோருகிறது.

6. ஆண் உபாத்தியாயர்களில் 10 வருஷமும், பெண் உபாத்தினிகளில் 5 வருஷமும் சர்வீசுள்ள ஆசிரியர்கள் டிரெய்னிங் ஸ்கூலில் படிக்காமல், போதனு முறை சர்ட்டிபிகேட் பெறுமாறு பரீக்ஷைக்கு ஆஜராவதற் கனுகூலமாய் விதிகள் திருத்தப்பட வேண்டு மென்று கோருகிறது.

7. இந்த ஜில்லாவிலுள்ள எல்லா எய்டெட் பாடசாலைகளும் ஒரே மாதிரியான பாட புத்தகங்களை வைக்கவேண்டு மென்றும், அவ்வித புத்தகங்களைப் பரிசீலனை செய்து சிபார்சு செய்ய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்படுகிறது.

8. சரியான முறையில், ஒழுங்காக நடைபெற்றுவரும் எய்டெட் பாடசாலைகளுக்கு பாடசாலைகள் நடைபெற்று வரும் இடங்கள் வாடகைக் கட்டிடமாயின் வருடத்தில் கொடுக்கப்படும் வாடகைத் தொகையில் பேர்பாதியும், சொந்தக் கட்டிடமாயின் வருடத்தில் வாடகை மதிப்புத் தொகையில் பேர்பாதியும் டீசிங் கிராண்டுடன் சேர்த்துக்கொடுக்க வேண்டுமாய் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

9. அந்தந்த கிராமங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களில் ஆசிரியர்கள் சேர்ந்துழைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறது.

10. ஸ்கூல்களில் மதக் கல்வி நீதி யொழுக்கம் முதலியன கட்டாயமாய் போதிக்கப்பட வேண்டு மென்று இம்மகா நாடு கருதுகிறது.

11. ஆசிரிய மானேஜர்களின் சங்கத்தின் நோக்கங்களைச் சாதிப்பதற்கேற்ற சாதகமாய் "தமிழ்த் தாய்" என்ற பெயரால் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பிக்கலாமென்று இம்மகா சபை தீர்மானிக்கிறது. இவைகளே முக்கியமான தீர்மானங்களின் சாரமாகும்.

## இலக்கிய நூற் குறிப்புகள்.

மலைகளிற் சிறந்தது மேருமலை; மாதங்களிற் சிறந்தது வைகாசி; வாரத்திற்சிறந்தது சோமவாரம்; மலர்களிற் சிறந்தது தாமரை மலர்; மரங்களிற் சிறந்தது சந்தனமரம்; நதிகளிற் சிறந்தது கங்கை'; இருடிகளிற் சிறந்தவர் வசிட்டர்; தமிழ்க்கல்வியிற் சிறந்தவர் அகத்தியர்; கற்பினில் மேன்மை பெற்றவள் அருந்ததி என்று பெரியோர் கூறுவர்.

* * *

பிறர்மனைவியரைத் தம் தாய் போலக் கருதுவது பெரிய தருமம்; பிறர் பொருளை எட்டிக் கனிபோல வெறுப்பது பெரிய தருமம்; பிறர் குறைகளை எடுத்துப் பேசாதிருப்பது பெரிய தருமம்; பிறருடைய துயரினைத் தம் துயர் போலக்கருதி இரங்குவது பெரிய தருமம் என்று தருமர் தம்பியாகிய வீமசேனர் ஒரு காலத்திற் கூறினாராம்.

* * *

குலத்தில் மேம்பட்டவனை மதிக்கப்படுவது அறிவுடையோர் மதிப்பதில்லை; அழகிற் சிறந்தவனை அவர்கள் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை; பெருஞ் செல்வம் படைத்தவர்களை அவர்கள் விரும்புவதில்லை; அவர்கள் பின் விரும்புவதும் அன்புடன் ஆதரிப்பதும் மதிப்பதும் எவரை? கல்வி ஞானம் உடையவர்களையே. அந்தஞானம் இல்லாதவர்கள் எவ்வளவு செல்வரேயாயினும் அவர்களை மணமில்லா முருக்க மலராகவே கொள்கின்றனர். இது அறிவுடையோர் இயல்பு. ஆதலால் அறிஞரால் என்றும் மதிக்கப்படுவது கல்வியே என்பது ஒவ்வொருவர் மனத்திலும் இருக்க வேண்டிய விஷயம். அக்கல்வியைப் போதிக்கும் ஆரம்பக் கல்வி பத்திரிகை ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய பத்திரிகையேயாம்.

# தேக சுகாதாரம்.

என். இராம கிருஷ்ணன், வேலூர்.

ஆகாரம்:—ஒருவனுடைய ஆரோக்கியத்திற்கு ஆகாரம் எவ்வளவு உபயோகமாக விருக்கிறது என்பதை இப்போது கவனிப்போம். நாம் ஜீவித்திருப்பதற்கு ஆகாரம் முக்கியம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், எந்த விதமான ஆகாரம் சாப்பிடவேண்டியதென்பது எவ்வாறு சாப்பிடவேண்டியதென்பதும் அநேகருக்குத் தெரியாது. பின்வரும் சுவல்ப விதிகள் இக்கேள்விகளுக்கு உத்தரங்கள் ஆகும்.

(1) அப்போது சமைத்ததும், சுத்தமானதும், சுவல்பமானதும், வாய்க்கு ருசியானதுமான ஆகாரத்தின்மேல் ஈ மொய்க்கும்படி அதைத் திறந்து வைக்காதே. ஈதான் அநேக அபாயகரமான வியாதிகளைச் சுமந்து போய் பரவச் செய்கின்றது.

(2) உனது ஆகாரம் போதுமானதாயும், சரிசமான எடை உள்ளதாயும், போஷணை குணமுள்ள தாயு மிருக்கவேண்டும். உனது ஆரோக்கியத்திற்கும் வலுவிற்கும் இத்தகைய ஆகாரம் அவசியம் வேண்டும். தவறான ஆகாரத்தினால் வியாதி உண்டாகும். பின்வரும் ஆகாரப் பதார்த்தங்கள் சிபார்சு செய்யப்படுகின்றன. கோதுமை, அரிசி, பருப்பு தினுசுகள், பச்சைமரக்கறிகள், மாமிசம், மீன், பால், கொட்டைகள் முதலியன. பால், ஒரு பூர்ணமான ஆகாரம். அதில் நமது ஜீவியத்திற்கு வேண்டிய எல்லா வஸ்துக்களும் இருக்கின்றன.

(3) ஆகாரப் பதார்த்தங்கள் விதம் விதமாய் இருக்கவேண்டும். தினம் பச்சை மரக்கறிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மரக்கறி ஆகாரம் தான், ஆரோக்கியத்தையும் வலுவையும் தந்து, இரத்தத்தை சுத்திகரித்து, தேகக் கழிவிடைகளை வெளித்தள்ளி, தேகம், மனது விருத்தியடைவதற்கு வேண்டிய பதார்த்தங்களைக் கொடுக்கின்றது. மாமிச பக்ஷிணிகளில் இருப்பதைவிட, சாகபக்ஷிணிகளில் மரண விகிதம் கம்மி.

(4) தினம் இரண்டு வேளை புசிக்கவேண்டும். காலை 11 மணிக்கு ஒரு தரமும் இரவு 8-மணிக்கு ஒரு தரமும் சாப்பிடவேண்டும். சிறுவர்கள் தினம் மூன்று வேளை சாப்பிடலாம். ஏனெனில், அவர்களுக்கு ஜீரண சக்தி அதிகம். கிழவர்கள் ஒரே வேளை சாப்பிட வேண்டும். இரவில் அல்ப ஆகாரம் உண்டால்போதும் ஏனெனில், அவர்களுக்கு ஜீரண சக்தி கம்மி.

(5) ஒரு போதும் வயறு நிரம்ப சாப்பிடாதே. அதிகமாக உண்பதே அநேக வியாதிகளுக்கு ஆஸ்பதம்.

(6) மெதுவாய் உண். ஒவ்வொரு கவளத்தையும் நன்றாய் மென்று தின். சரியாய் மென்றால், நன்றாய் ஜீரணமாகும். ஆகாரம் இரத்தத்தில் செவ்வையாய் உறிஞ்சப்படும்.

(7) உண்ணும்போது, மனது நிம்மதியாயிருக்கட்டும். அப்போதுதான் ஜீரணம் சரியாக விருக்கும். கோபம், மனோவேஷ்டை, கவலை இவற்றுடன் உண்டால் ஜீரணம் கெட்டு, வியாதி சம்பவிக்கும்.

(8) கிரமமான நேரங்களில் ஆகாரத்தைப் புசிக்கவேண்டும். காலந்தப்பி உண்டால், பாரிச வாயுவு, நீரிழிவு முதலிய ரோகங்கள் காணும்.

(9) காப்பி, தேயிலை முதலிய உத்தீபன வஸ்துக்களைத் தவிர்.

ஜலம்:—தினம் நிரம்ப ஜலம் குடிப்பதின் பலனை அநேகர் அறிந்தாரில்லை. தேகத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஜலம். ஒருவன் ஆகாரமின்றி அநேக வாரங்கள் இருக்கலாம். ஆனால் ஜலபானமின்றி சில நாட்கள்கூட வசித்திருக்க முடியாது. ஆனதுபற்றி; தினம் நிரம்ப சுத்தமான ஜலம் குடிக்க வேண்டியது அவசியம். 'நிரம்ப' என்றால் குறைந்தது ஐந்து டம்பளர் ஜலமாவது தினம் பருகவேண்டும். காலையில் எழுந்திருக்கும்போது ஒரு டம்பளர், ஆகாரம் சப்பிடுவதற்கு முன்னே ஒரு டம்ப



ளர், இரண்டு முக்கியமான ஆகாரங்களுக்கிடையில் ஒரு டம்பளர்; இரவில் ஆகாரத்திற்கு முன் ஒரு டம்பளர், கடைசியாக படுக்கப் போகு முன் ஒரு டம்பளர், ஆகிய 5 டம்பளர் ஜலம் குடிக்க வேண்டும். சாப்பிடும்போது கொஞ்சம் ஜலம் பருகினால் போதும். ஏன் நமது தேகத்திற்கு இவ்வளவு ஜலம் வேண்டியதென்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதற் காரணம், இது இயற்கையில் ஏற்பட்ட தாகத்தைத் தணிப்பதற்கு ஏற்றபானம். இரண்டாவது இது தேகத்தின் சீதோஷ்ணத்தை ஒழுங்குப்படுத்தி, தேகத்தின் உஷ்ணத்தை நாளபக்கங்களிலும் கொண்டுபோய் சமப்படுத்தி, அதிகமாய் உள்ள உஷ்ணத்தை வியர்வையின் மூலமாய் வெளிப்படுத்துகிறது. தேகத்தின் கழிவு பதார்த்தங்களை வெளித் தள்ளுவதற்கும் ஜீரணத்தொழிலை நடத்துவதற்கும் இது அவசியமானது. ஜலமானது இரத்தத்தை சுத்தி செய்து, சர்மத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டிருப்பதற்கு உதவியாகிறது. மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டியது யாதெனில் நாம் குடிக்கும் ஜலம் சுத்தமானதாக விருக்க வேண்டும். அசுத்தமான ஜலத்தினால் அநேக வியாதிகள், அதாவது, காலரா, விஷஜுரங்கள், சீதபேதி முதலியன உண்டாகும். ஜலம் சுத்தமானதென்று நிச்சயமாய்த் தெரியாவிட்டால், அதைக் கொதிக்க வைத்து ஆற்றி சாப்பிட வேண்டியது. கொதிக்க வைப்பதினால் விஷக் கிருமிகள் யாவும் அழியும். திராக்ஷாஸம், சாராயம், காபி, தேயிலை முதலிய பானங்கள் தேகத்திற்குக் கெடுதலையை உண்டுபண்ணக் கூடியவையாதலால் அவைகளைத் தவிர்க்க வேண்டும்.

காற்று:—இதற்கு அடுத்தபடி முக்கியமானது காற்று. மரங்கள் முதற்கொண்டு ஒவ்வொரு ஜீவ ராசியும் உயிருடன் பிழைத்திருப்பதற்குக் காற்று அவசியம் என்று ஒரு மூடனுக்கும் தெரியும். நாம் ஆகாரம், ஜலம் இவை இன்றி சில நாட்கள் வரையிலும் உயிருடன் இருக்கலாம். ஆனால் காற்றின்றி சில நிமிஷங்கள் கூட இருக்கமுடியாது. ஜனங்களில் பெரும்பான்மையோர் இப்போது காற்றில்லாத அறைகளிலும், ஜன்னல்களை மூடிக்கொண்டு தொழிற்சாலைகளிலும் தினம் காலத்தைக் கழிக்கின்றனர். கெட்ட காற்றையும், போதுமானதல்லாத காற்றையும் உட்புகுவதினால் நேரிடும் கஷ்டங்கள் இன்னதென்று அவர்கள் அறிந்தாரில்லை. நமது முன்னோர்கள் அவர்கள் காலத்தை சதா வெளிக் காற்றிலேயே கழித்து வந்தனர். அவர்கள் தொழிலும் வெளிக்காற்றிலேயே நடந்துவந்தது. இப்பொழுது ஜனங்கள் காற்றோட்டமில்லாத ஆபீசுகளிலும் தொழிற்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் நடவசாலைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் காலம் கழித்து அதனால் அவர்கள் அகால மரணமடைய நேரிடுகிறது. ஆனதுபற்றி, மகா கொடிய வியாதியாகிய காசம் நமது இந்தியாவில் எங்கும் இப்போது வியாபித்திருக்கிறது.

சுத்தமான காற்றினால் அநேகவித மார்பு, நுரையீரல் வியாதிகள் வரா. வந்தாலும் உடனே சொஸ்தமாகும். மேலும் சுத்த காற்றினால் இரத்தச் சுழற்சி நன்றாய் இருக்கும், சர்மம் பளபள வென்று மேனியோடிருக்கும், சதைகள், நரம்புகள் இவைகளுக்கு வலுவு ஏற்படும். மனது தேகம் நிர்மலமா யிருக்கும். நல்ல தூக்கம் வரும். சுத்த காற்றானது இயற்கையில் ஏற்பட்ட ஒரு டானிக். அது இராவிடின், ஆரோக்கியம் இராது. ஆனது பற்றி ஒவ்வொருவரும் தினம் சிறிதுநேரம் வெளிக் காற்றில் காலம் கழிக்க வேண்டியது அவசியம். அவர்கள் வேலை செய்யும் இடங்களிலாவது உறங்கும் அறைகளிலாவது உள்ள ஜன்னல் கதவுகளை நன்றாய்த் திறந்துவைத்து வேலை செய்யவோ படுக்கவோ வேண்டும். சதா அறைகளை காற்றோட்டம் இருக்கும்படி வைத்துக்கொள்ள வேண்டும்.

வியாயாமம்:—ஒருவனுடைய ஆரோக்கியமானது, அவன் உண்ணும் உணவையும் அவன் செய்யும் வியாயாமத்தையும் பொருந்தியது. வியாயாமம் என்றால் தேகாப்பியாச மட்டுமல்ல.

மனப்பயிற்சியும் அதில் அடங்கியுள்ளது. வியாயாமத்தினால் தேகத்திற்கு நல்ல பலன் ஏற்படுமென்பதை ஒருவரும் மறுத்துச் சொல்ல முடியாது.

தேகாப்பியாஸமானது, சதைகளுக்கு உத்தீபனத்தைக் கொடுத்து அவைகளை வலுவு செய்கிறது. தேகத்திலுள்ள கழிவிடைகளை வெளித்தள்ளி, நரம்புகளுக்கும் சர்மத்திற்கும் பலத்தைக் கொடுக்கிறது. தவிர, தேகாப்பியாஸமானது, பிராணவாயுவை உட்கொள்ளும்படிச் செய்கிறது. அதனால் நுரையீரல்களுக்கும் ஹிருதயத்திற்கும் வலுவு உண்டாகிறது. தேகாப்பியாஸத்தினால் இரத்தச் சுழற்சி துரிதமாக ஓடுகிறது. ஆகாரம் சரிவர ஜீரணமாகி, பசி நன்றாய் எடுக்கிறது. நல்ல தூக்கம் வருகிறது. சுருங்கச் சொல்லுமளவில் தேகாப்பியாஸமானது தேக முழுதிற்கும் வலுவைக் கொடுக்கிறது.

கூடியமட்டும், தேகாப்பியாசத்தைத் திறந்த வெளியில் செய்யவேண்டும். அது முடியாவிட்டால், நல்ல காற்றோட்டமுள்ள அறைகளிலாவது, கூடங்களிலாவது எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேகாப்பியாஸம் இரண்டுவிதம்; சதையைப் பற்றியது, சுவாசத்தைப் பற்றியது. பின் சொல்லியது நுரையீரல் வியாதிகளை வரவொட்டாமல் தடுப்பதற்கும், வந்தவுடன் சொஸ்தம் செய்வதற்கும் முக்கியமாய் உபயோகப்படுவதுடன் நுரையீரல்களை வலுப்படுத்துவதற்கும், மார்பை அகலப்படுத்துவதற்கும் உபயோகப்படுவது.

தேகாப்பியாஸங்களில் சிலவற்றை இங்கு எடுத்துரைப்போம்:—

சதையைப்பற்றியது:—(1) பாதங்களை சில அங்குலதூரம் ஒதுக்கி வைத்து நிமிர்ந்து நில். உனது மார்பை வலது பக்கமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு வளை. பிறகு அதேமாதிரி இடது பக்கம் வளைத்து முன் இருந்த நிலைக்கு வந்துவிடு, இதேமாதிரி ஒவ்வொரு அசைவையும் 12-தரம் செய். இது சதைக்குத் தகுந்த அப்பியாசம். தேகத்தை சுறுசுறுப்பாயும் வலுவாயும் வைத்திருக்கச் செய்யும்.

(2) பாதங்களைச் சில அங்குல தூரம் ஒதுக்கி வைத்து நிமிர்ந்து நில். உனது கைகளை உயரத் தூக்கு. முன் பக்கம் வளை. உனது நடுக்கைவிரல்களால் கால்விரல்களைத் தொட முயல். பிறகு முன் போல நில். பிறகு பின்பக்கமாக வளை. முன்போல நில். இம்மாதிரி வளைவுகளை 12-தரம் செய். ஆனால் முழங்கால்களை மட்டும் வளைக்காதே. இந்த அப்பியாசமானது கல்லீரல், புக்கம் இவைகளில் காணும் வியாதிகளைத் தடுப்பதற்கு உபயோக முள்ளது.

பிராணாயாமம்:—இதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் வாயைக் கெட்டியாய் மூடிக்கொண்டு, மூக்கினாலேயே சுவாஸிக்க வேண்டியதென்பதாம்.

1. மெதுவாய் சுவாஸத்தை உட்கொள். நுரையீரல்களைக் கூடியமட்டும்ரொப்பிக்கொள். சுவாஸம் உட்கொள்ளும்போது, உன் கைகளை மேலே தூக்கு. பிறகு சுவாசத்தை வெளிவிடு. சுவாசத்தை வெளிவிடுகையில், மெதுவாய் கைகளை இறக்கு. இம்மாதிரி 12-தரம் செய்.

2. உனது இடது நாசியை மூடி மெதுவாய் சுவாஸத்தை உட்கொண்டு, வலது நாசி மூலமாய் ஆழ்ந்து உட்கொள். பிறகு வலது நாசியை மூடிக்கொண்டு, சில செகண்டுகள் சுவாஸத்தை நிறுத்து. இந்த அப்பியாஸத்தை மாற்றி மாற்றி 6-தரம் செய்.

இப்போது மனதின் வியாயாமத்தை எடுத்துக் கொள்வோம். தேகம் சரிவர வேலை செய்ய வேண்டுமானால், மனது சரியாக இருக்க வேண்டும். மனதிற்குச் சரியான வேலை இராத பக்ஷத்தில் அநேக தீங்குகளைச் செய்யத் தோன்றும். அதனால் நல்ல குணம் வராது. தேகம் நன்றாய் வளராது. ஆனதுபற்றி, சரியான வழியில் மனதைச் செலுத்தி, அதற்குப் போதுமான வேலையைக் கொடுக்கவேண்டும். பெரிய விஷயமோ, சில்லரை விஷயமோ எதுவாயிருந்த போதிலும், அதனிடம் தக்க கவனத்தைச் செலுத்துவது மனதின் சுபாவம். அதனால் சுகமும் சந்துஷ்டியும் உண்டாம்.

# பெற்றோர் சங்கம்.

சி. வேங்கடேச ஐயர், பி. ஏ. எல். டி., டிப்டி இன்ஸ்பெக்டர்.

பெற்றோர் சங்கம்' என்ற தொடர்மொழி உச்சரிக்கும் பொழுதே சிறுவர், சிறுமிகளைப்பற்றிய விஷயமென்றும், அவர்கள் ஒருங்கு கூடி நடத்தும் ஒரு சபையென்பதும் பொருள்படும். பாடசாலையில் படித்துக் கொண்டும், இனிப் படிக்கத்தயாராகவிருக்கும் பாலர்களின் பெற்றோர் சங்கம் எனக்கூறப்படும்.

பாலர்களின் க்ஷேமத்தைக் கருதியே இச்சங்கம் தேவை யெனலாம். தகுந்த ஆசான்களோடு பெற்றோர் தீர்க்கமாக ஆலோசித்து மாணுக்கர்கட்கு பள்ளியில் படிக்கும் ஏற்ற விஷயங்களையே கற்பிக்கும்படி செய்வதே இதன் நோக்கமாகும். பெற்றோர்களின் நடை உடை பாவனை, இடம், பொருள், ஏவல் இவைகளைப் பொறுத்தே சிறுவர்களின் குணம் தீர்மானிக்கப்படுவதால், ஐங்குரவரில் ஒருவராகிய ஆசான் சிறுவர்கட்குப் போதிக்கும் விஷயம் முறை இவைகளைப் பற்றி நன்கு ஆலோசித்தல் அவசியம். ஊனமுள்ள அங்கம், புலன்களையுடைய மாணவர்கட்கு கற்பிக்கும் முறை மாறுபடலாம். வீட்டில் அன்றாடம் நடைபெற்று வரும் சம்பவங்கட் கேற்ப பிள்ளைகளின் மனோபாவம் மாறுபடும். உறவினருடன் ஊருக்குச் செல்லும் எண்ணமோ, பெற்றோருடன் கழனிகட்குச் செல்லவில்லையே என்ற எண்ணமோ அதிகரித்தால் படிப்பில் கவனம் குறையுமல்லவா; இவ்வாறுள்ள மனோபாவமுள்ள காலத்து ஆசானின் போதனை மணலிற் கிறைத்த நீர்போலாம். பெற்றோர்கட்குத் தங்கள் பிள்ளைகள் சீக்கிரத்தில் கல்வி கற்று மேதாவிகளாக வேண்டுமென்கிற அவா இருந்து வருகிறது. ஆசான்கட்கோவெனின் தங்களிடம் ஒப்புவித்த சிறுவர்கள் படிப்பில் சமர்த்தர்களென சீக்கிரத்திலேயே யோக்கியதா பத்திரம் பெற வேண்டுமென்கிற நோக்கமே முக்கியமாயிருந்து வருகிறது. இருவருக்கும் நோக்கம் ஒன்றுதான். தனித்தனி எண்ணுகிறார்களே யொழிய கலந்து யோசிப்பதில்லை. அவ்வாறு செய்வதானால் எவ்வித படிப்பு தங்கள் பிள்ளைகட்கு ஏற்றதென்றும் அதை எக்காலத்து, எவ்விதம் ஊட்டுவதென்றும், எந்தெந்த வழிகளில் அதை ஆசான் புகட்டுங்கால் தாம் அவருடன் ஒத்துழைக்கக் கூடுமென்பதும் அவர்களறிவார்கள்

இக் காலத்தில் பிள்ளைகள் பள்ளிக்குச் சென்று கற்கும் காலம் ஐந்துமணி. ஒரு நாளில் தூக்கம்போக விழித்திருக்குங் காலம் 15-மணி எனறெண்ணுவோமானால் பாடசாலை நேரம் 5-மணி போக மீதி 10-மணி காலத்தை அவர்கள் எவ்வாறு செலவு செய்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். நண்பர்களுடன் விளையாடுகிறார்கள். பெற்றோர், உறவினர், இவர்களிடத்து காலங் கழிக்கிறார்கள். தேகம், உடை சுத்தப்படுத்தல் இவைகளிலும் கொஞ்ச காலம் சென்று விடுகிறது. சிறுவர்கள் பாலராயிருக்கும்பொழுது நல்லதோ கெட்டதோ ஒருவிதப் பழக்கத்தைக் கைப்பற்றிவிட்டால் அது அவர்களின் மூளையை விட்டு அவர்கள் உயிர்துறக்கும் வரை விடுகிறதில்லை. என்பதாக அநேக நிபுணர்கள் கூறுகிறார்கள். நம் அநுபவமும் அவ்வாறே இருந்து வருகிறது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்பது கேட்டதில்லையா. ஆகையால் அவர்கள் சொல்வதாவது கெட்ட பழக்க வழக்கங்களை சிறுவர் காட்டவும், அவர் முன்னிலையில் பேசவும், கூடாது என்கிறார்கள். எங்கும் நிறைந்த பரம்பொருளின் முன்னிலையில் எவ்வாறு கெட்டபேச்சுகள் பேசவும் மனம் இடங்கொடாதோ அவ்வாறே பாலர்கள் முன்னும் நடந்துகொள்ள வேண்டுமாம்.

அவ்வாறிருக்கும் காலத்து சிறுவர்கள் ஆசான் அண்டையில் இருக்கும் 5-மணி சாவகாசத்தில் சத்விஷய ஆராய்ச்சியே செய்துவருவதாகஎண்ணிய போதிலும் இதர 10 மணிநேரத்தில் உலகத்தில் நடைபெறும் குற்றமுள்ள செய்கைகளைக் காண்பதும், செய்வதும் இல்லையெனக் கூறுதற்கில்லை. இதைப்பற்றி கவனிப்போர் பெற்றோர்களையன்றி வேறு யாருளர்? பாடசாலையில் எவ்விதமாகப் படிப்பு கற்பிக்கிறார்கள் என்பதே அநேகருக்குத் தெரியாது. சிறுவர்கள் கற்றுவரும் சத்விஷயங்கட்கு நேர் பெற்றோரிலும் சிலர் நடந்துவரக் கூடும். அல்லது தம்மக்கள் அவ்வாறு செய்தால் கண்டிக்காமல் விட்டுவிடவும் கூடும். அதுவுமன்றி கவனியாமல் இருந்து விடுதலுமுண்டு. தமக்கே அவர் செய்வது கெடுதலானது என்ற அறிவு இல்லாமலும் இருக்கலாம். இங்கு எடுத்துக் காட்டும் சில உதாரணங்களிலிருந்து நாம் இங்கு காட்டியவைகள் அனுபவத்தை யொத்திருக்கிறதெனினும் அவைகளை அறிவாளர்கள் சீக்கிரத்தில் கடிந்து தள்ள வேண்டியதெனவும் அறிவார்கள்.

| | |
|---|---|
| 1. ஐங்குரவர்கட்கு மரியாதை செய்:— | அனுபவத்தில் இல்லை. |
| 2. கடவுளை எண்ணிக் கருமம் துணி:— | எண்ணுவதே கிடையாது |
| 3. சத்தியம் பேசு. | உறவினர்களே தம் சுயநலங் கருதி அசத்தியம் பழக்குதல் |
| 4. திருடக் கூடாது. | தன் வீட்டிலே தின் பண்டங்களைத் திருடல் அயல் வீட்டில் உள்ளதைக் கொண்டுவரும்படி கட்டளை யிடல். |
| 5. சுத்தம் பேணல். | சுற்றுப்புறம் அசுத்தம். புழுதியில் படுத்துறங்கல் விளையாடல் |
| 6. சுத்த நீரருந்தல். | எந்த நீரும் குடித்தல். |
| 7. லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கக்கூடாது. | பந்துக்கள் உபயோகித்தல் குழந்தை கட்கும் கொடுத்தல் பழக்கல். |
| 8. ஆகார திட்டம், நியமம் சுத்தம் | நினைத்த ஆகாரம், கிடைத்த பொழுது மிதமின்றி சாப்பிடப் பார்த்தல். |
| 9. கெட்டவருடன் சேரக் கூடாது | கவனமின்றி விட்டுவிடல் தாமே கெட்ட இடங்கட் கழைத்துச் செல்லல். |

இவ்வாறு செய்வதாய் சிறுவர்கள் எதைத் தங்கள் உபாத்தியாயரிடம் கற்றுக்கொள்கிறார்களோ அதற்கு நேர்மாறான செய்கையில் பழகுவதின் ஆசானின்வார்த்தையில் பற்று இல்லாமல் போகிறது. அதாவது அது 'வெட்டுச் சுரைக்காய்' ஆகிறது. இதுவும் ஆசான் இது போன்ற புத்திமதிகளை அனுபவத்தில் விளக்கிக்காட்டாமல் இருந்தால், அவர்கள் எதைச் செய்து வருகிறார்களோ அதுவே அவர்களிட பழக்கமாகிறது. எதை அவர்கள் படித்துவருகிறார்களோ அதையே அனுசரிக்கும்படி வீட்டிலும் வற்புறுத்தின் சிறுவர்கட்கு நல்ல குணம் விருத்தியாகும். படிப்பின் பயனை யடைவார்கள். ஆகவே மாணவர்கட்கு எது போதிக்கப்படவேண்டும், எக்காலத்து, எவ்விதம் படிப்பிக்கலாம் என்பதை ஆசானும் பெற்றோரும் முதலில் ஆலோசிப்பதே முதற்படியாகும். பின்னர் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அதன் அபிவிருத்தியைப் பற்றி ஆலோசித்தல், ஒவ்வொரு பெற்றோரையும் கண்டு தனித்தனி பேச அதிக அவகாசமிராவிடினும் சங்கத்தில் ஏககாலத்தில் எல்லோரையும் காணலாம்.

(தொடரும்)

# பெண் கல்வி

ஸ்ரீமதி, அசலாம்பிகையம்மாள்)

---

## கல்வி இருபாலர்க்கும்போது.

பண்டைக் காலத்தில் அதாவது கல்வி யவசியமென்பதாய் நீதி வாக்கியங்கள் ஏற்பட்ட காலங்களில் இருபாலாரும் ஒப்பப் படித்து வந்தார்களன்றி பெண்களுக்கு கல்வி அவசியமாவென்கிற ஐயப்பாடும் கொண்டதில்லை.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகு மழகல்ல"--என்ற நாலடியாரிலும், "விலங் கொடுமக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோ டேனையவர்" என்றகுறளிலும்,

இருபாலாரையும் பொதுப்படச் சுட்டிய 'மக்கள்' என்னும் மொழியும் முன்னூல்கள் பலவற்றிலும் கூறியிருக்கும் மகடூஉ முன்னிலையும் பெண்கல்வியை நமக்கு வலியுறுத்துவனவாகும்.

தவிர, நாம் கல்வியையே ஓர் பெண் தெய்வமாக உபசரித்து வருகிறோம். எண்ணிறந்த கல்விமான்களின் நீதிவாக்கியங்கள் உலகிலிருக்கவும் பெண்பாலாகிய ஔவையாரின் நீதி வாக்கியங்களையே சிறுவருக்கு இளமையில் மனப்பாடம் செய்விக்கும் வழக்கம் நாம் மறக்கற்பாலதன்று.

அன்றியும் அக்காலத்திய சான்றோர் பெண்களில் மிகக் கற்றோரை இக்காலத்திய சில பண்டிதர்களைப்போல் பொறாமை அசூயை முதலியனவின்றி ஆண்பாற் கலைவாணரினும் சிறப்பித்து வந்தாரென்பது நன்கு விளங்குகின்றது.

வைதீகப்பிராமணமத பாலஸங்கியாஸியாகிய ஸ்ரீ சங்கர பகவத் பாதர் வாதப்போர் செய்து ஜகத்குருவாய் அபிஷேகம் பெற்ற அக் காலத்தில் கல்வியிற் சிறந்த பெண்பாலார்க்கு சபா நாயகத்தன்மையுமளித்து அவர்கள் கீழ் ஆண் கவிஞர்கள் விஷய விசாரமும் செய்திருக்கின்றனர். இது பௌத்தமதத்தின் இறுதியும் அத்வைத மதத்தின் ஆரம்ப காலமும் ஆகிய சங்கர விஜய காலத்தில் அவருடன் வாதஞ்செய்ய அக்காலத்திய பண்டிதர்களுள் முதன்மை பெற்ற மண்டனமிசிரர் என்பவர் முன்வந்தபோது, இவ்விருவரின் அபரிமிதமான கல்வித் திறமையை நடுநின்று சீர் தூக்கி ஜெயாபஜெயங்களைக் குறிக்கத்தக்க ஒருவர் அங்கு கூடிய பண்டிதக் கூட்டத்தில் இல்லாமல், மண்டன மிசிரரின் மனைவியாகிய உபயபாரதி யென்னும் பண்டிதையே யாவரினும் சிறந்தவளெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவளையே சபா நாயகியாக வைத்து 18 தினங்கள் வாதம் செய்து, முடிவில் ஸ்ரீமத் சங்கரரே வெற்றிபெற்றதாக சபாநாயகியால் குறிக்கப்பட்ட விவரம் ஸ்ரீமத் சங்கர விஜயத்தில் விஸ்தாரமாய்க் காணப்படுகிறது. இதனால் ஸ்திரீ அன்னிய புருஷர்களுக்கு மட்டில் தலைமைஸ்தானம் வகித்தனரென்பதல்லாமல் தன் சொந்த கணவருக்கே தலைமைஸ்தானம் வகிக்க கல்வி விஷயத்தில் முற்படுத்தப்பட்டார்களென்கிற உயர்ந்த கருத்தும் வெளியாகின்றது. அன்றியும் தன் புருஷனென்கிற அபிமானத்தினை நியாயமுறையில் பாராட்டாது வழுவுதலின்றி அன்னிய புருஷனின் வெற்றியை மனச்சாட்சிக் கேற்ப வெளியிட்ட உபய பாரதியின் நீதிப்புலனால் மனோநிடனும் எத்தகைய தென்பதையும் ஈண்டு நாம் சிந்திக்கத்தக்கதாகும்.

இதுவுமன்றி, அநேக ராஜ ஸ்திரீகளும்

பிராமண ஸ்திரீகளும் பிரபல வித்வமணிகளாய் ராஜசபைகளிலும் பிரசங்கமேடைகளிலும் இருந்து வந்ததாக பல நூல்களிலும் ஆங்காங்கு காணக்கிடக்கிறது. உலகம் மதிக்கும் காளிதாஸ மகாகவியை சமஸ்தான வித்துவானைப்பெற்ற ரஸிகசிகாமணியாகிற போஜராஜனின் ஸபையில் ஆடவருடன் குடும்பதர்மம் புரியும் ஸ்திரீகளும் விதுஷிகளாய் (பண்டிதைகளாய்) விஜயம் செய்து யாவரும் பிரமிக்கும்படி கவிபாடி ஸன்மானம் பெற்றார்களென்று சொல்லப்படுகிறது. மலை நாட்டரசனை தான்மிக ராஜனின் மனைவி வித்துருலதையெனும் பட்டத்தரசி இயல் இசை நாடகமென்னும் முத்தமிழிலும் தேர்ச்சிபெற்று பல பண்டிதைகள் இடைவிடாது தன்னைச் சூழ்ந்து நிற்க சபை கூட்டிக்காலம் போக்கியதாக ஏற்படுகிறது.

வரகுணபாண்டியரின் மனைவி மதனை லீலையாரும் அருங்கவிப் புலமைவாழ்ந்து பல நூல்களியற்றிச் சிறப்புற்று வாய்ந்தனர். இன்னும் ஆராய்ந்து பார்க்குமிடத்து, இது போன்றிருந்தவர் பலருண்டு. இது காறும் நாம் கூறிவந்ததெல்லாம் பண்டைக்காலத்தில் கல்விப் பயிற்சி இருபாலாரிலும் பொதுப்பட அபிவிர்த்தி செய்யப்பட்டும் ஆடவரால் கற்ற பெண்கள் பெரிதும் கவுரவிக்கப்பட்டும் வந்தனரென்பதை எடுத்துக் காட்டுவதற்கே யன்றி வேறில்லை. இனி பெண் கல்வியின் அவசியத்தை பற்றிக் கூறுவோம்.

ஒருகைக்குக் குளிர் பனி முதலியவை தாக்காமல் உறையணிந்து மறுகரத்தினைத் திறந்து வைத்தல் எம்மட்டில் அலங்காரமும் நாகரீகமுமாமோ அம்மட்டில் ஆடவர்படித்து மகளிர் அஃதில்லா திருத்தலுமாம். இந்திய ஸ்திரீகள் மேல் நாட்டுப் பெண்களைப் போல் பொருள் தேடும் சாதனங்களைப் பயிலக் கூடியவர்களாயிராமல் குடும்பப் பாது காப்பு பாலரை நல்வழியில் பயிற்றி வளர்த்தல், பந்துக்களையும் நட்பினரையும் எளியவர்களையும் துறந்தவர்களையும், அவரவர்க்கு ஏற்ற முறையாய் உபசரித்தல். கடினம் அற்பம் என்று மதிக்கத்தக்க மனைக்குரிய வேலைகளில் பயிற்சி பெற்றிருத்தல். கணவன் பதவியினால் தான் அகங்கரியாமலும் சோம்பலுறாமலும் அவர்க்குக் கீழ்ப்படிந்து அன்பாய்நடத்தல். கற்பிற் கலங்காது இருகுலத்திற்கும் ,தனக்கும் கீர்த்தியையுண்டு பண்ணல். பழமையான குல தர்மங்களையும் விரதா நுஷ்டானங்களையும் கைவிடாது ஆசரித்தல். சீலம் தெய்வ பக்தி இவைகளைக் கைவிடா திருத்தல்—ஆகிய இத்தகைய கடமைகள் பலவற்றையும் ஆதரித்துக் குடும்பத்திற்கு க்ஷேமத்தையும் புகழையும் உண்டுபண்ண வேண்டியவர்களாகின்றனர். இவைகளில் ஒவ்வொரு கடமையும் எளிதல்ல. இவையனைத்தினுடைய நிர்வாகத்திற்கும் எஜமானிகளாக வேண்டிய மாதர்கட்கு விரிந்த பலவகைக் கல்வி பயிற்றப்படல் அவசியமன்றென அறையலாகுமோ? கல்விப்பயிற்சியின்றியும் பல மாதர்கள் இந்தியாவில் நன்னடத்தையோடு நற்குணவதிகளாய் இல்லறம் நடத்திவருகிறார்கள். ஆனால் அத்தகையார் புரியும் இல்லறத்தில் வழுவுதல் இன்றிமட்டில் இருக்கலாமன்றி புருஷனுக்குச் சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்யும்படியாகத் தங்கள் புத்தி விசேஷத்தினால் ஒருவித நன்மையையும் செய்யக் கூடியவர்களாயிருக்கமாட்டார்களென்பது கல்லின் மீதெழுத்தாம். மேலே கூறிய கல்லாமாதர்களின் நன்னடையும் நிர்வாக சக்தியும் நாளடைவில் பழக்கத்தினால் சாதகப்படுவதன்றி வேறில்லை. அதை உற்று நோக்குமிடத்து சிறுவர்கள் எழுத்தின் பெயரை உபாத்தியாயரால் உணர்த்தப் பெறாமல் அவ்வெழுத்துக்களின் வரிவடிவங்களை வரிசைக்கிரமமாக எழுதப் பயில்வதற்கே இணைகூறலாகும். இவற்றிற்குள்ள தாரதம்மியத்தை நன்கு யோசியுங்கள்.

நிலம் சிறந்தவளப்பமுடையதாயினும் அதற்குக் குளிர்ந்த புனலும் சிறந்த எருவும் இடுதலே அதிக விளைவை யுண்டுபண்ணல்போல, இயல்பாகவே இந்திய மாதர்கள் உத்தமகுணம்

(இதன் தொடர்ச்சி 80ம் பக்கம் பார்க்க)

# சென்னை கவர்ன்மென்ட்

## ஆரம்பக் கல்வியைக் குறித்த ஆக்ட்

ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்ட அடியிற் கண்ட ஆக்டானது - 1920-ம்ஸ்ரீ அக்டோபர்மீ 12உ கவர்னரவர்களாலும், 1920ஸ்ரீ நவம்பர்மீ 18உ கவர்னர்ஜெனரல்வர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது:—

சென்னபட்டணம் 1920-ம்ஸ்ரீத்து 8-வது ஆக்ட்.

---

### 1920-ம் ஸ்ரீத்திய சென்னபட்டணத்து மூலாதாரக்கல்வியைக் குறித்த ஆக்ட்.

---

அட்டவணை.

பீடிகை.

#### 1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பிரிவு.

1. பெயர்.
2. வியாபகமும் செலாவணியாகத் தொடங்குவதும்.
3. அர்த்தம்.

#### 2-ம் அத்தியாயம்.

ஜில்லா கல்விச் சபைகள்.

(1) அவைகளின் அமைப்பு.

4. ஜில்லா கல்விச்சபை.
5. சபையின் அமைப்பு.
6. சபையின் வைஸ் ப்ரெஸிடென்ட்.
7. தெரிந்தெடுப்பதையும் நியமிப்பதையும் கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டுமென்பது.
8. சபையின் மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கும் கால அளவு.
9. சபையின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பர் உத்தியோகத்தை ராஜீநாமா செய்வது.

சென்னபட்டணம் 1920ஸ்ரீத்து 8-வது ஆக்ட்.

10. சபையின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பரை நீக்கி விடுவது,

# கடவுள் வழிபாடு

ஸ்ரீ பிரம்ம சைதன்யர் எழுதியது

பெறுதற்கரியது முத்திப்பேறுஎன்பர்பெரியோர். உலகின்கண்ணுள்ள ஜீவராசிகளனைத்தும் அடைவதற்குரிய கடைசிநிலை இதுவே யாகும். இந்நிலையை அடையப்பெற்றதோ ருயிரானது பிறப்பென்னும் பந்தங்களினின்றும் விடுபட்டதென்பது சாஸ்திரங்களின் துணிபு. எறும்பு முதல் பிரம்மாவரையிலும், ஏன், புல் பூடு முதலாய தாவரங்களும் தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ அந்நிலையையே நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. அதிலும் பகுத்தறிவுள்ள மக்கள் தாம் வந்தவரவை மறவாமல் நினைந்து, உண்டுடுத்துறங்குவதே சதமென நினையாது அந்நிலையையெய்துவதன்பொருட்டுத் தீவிரமாக முயற்சிக்கின்றனர். இதனை ஈஸ்வரனில் நம்பிக்கை வைத்து அவனையடைந்துச் சதாகாலம் அழிவற்ற ஆனந்த மனுபவிப்பதென்றும் அல்லது அவனோடு இரண்டற ஐக்கியப்படுவதெனவுங் கொள்வர்.

ஆயின் இந்நிலையையெய்துவதற்கான வழி யாது? எழுதுகோலின்றி எழுதவும் அறிவாளில்லாமல் அறுக்கவும் முடியாதென்பது வெளிப்படை. அதேபோன்று இந்நிலையைப் பெறவேண்டுமாயின் சாதனமொன்று அத்தியாவசியமாகின்றது. இச்சாதனம் பலதிறப்படும். அவ்விதச் சாதனங்களிலொன்றாயது வழிபாடு. இதனை வணக்கல், பூசித்தல், ஆராதனை செய்தல் எனவுங் கூறலாம். பண்டைக் காலத்திருந்தே மாந்தர் தம்மறிவுக் கெட்டியவாறு பல்வேறு விதமாக ஆராதனை புரிந்துவருகின்றனர். இதனுட்பொருளைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் இஃது இரண்டு கொள்கைகளை யுடையதா யிருக்கக்காணலாம்.'?

அவையாவன: ஒருவரது மனத்திற்கேற்ப அவரது சுபாவமும் பதிகின்றதென்பது முதற் கருத்தாகும். எக்காலமும் உலகைச் சிந்திப்பவன் உலகமயனாயும், பகவானைச் சிந்திப்பவன் பகவானுடைய தன்மையையும் பெறுகின்றான். இலௌகிகன் ஒருவன் இந்திரிய விஷயங்களைப் பற்றியே எண்ணியும் அவற்றையடைவதற்கான காரியங்களையே செய்து அவற்றையே அனுபவிப்பதையும், ஈஸ்வரனை வேண்டுவோன் அவரையே நினைத்தும் பாடியும் வழிபடுவதையும் நாம் காண்கின்றோமல்லவா?

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது போன்றும், திருடனைப் பிடிக்கத் திருடனே தகுந்தவன்' என்னும் உலக நடையேபோன்றும் நம்மின் வேறாயதொன்றை அறியவேண்டின் நாம் அஃதிருக்கும் நிலையையெய்தினாலல்லாமல் அதனை முற்றிலும் அறிந்துகொள்ள முடியாது. ஆகவே நாம் பகவானையடைய வேண்டுமாயின அவனுடைய தன்மையைப் பெறுவதற்கான கருவியாகும்படி செய்வது எனலாம். வழிபடும்போது நம் சித்தத்தைப் பகவானிடத்திலேயே செலுத்தல்வேண்டும். சிறிது நேரமாகிலும் அப்படிச் செலுத்தும்போதுதான் நம்மனத்தைச் சிறிதாகிலும் அவருடைய நிலைமைக்குக் கொண்டுவருகின்றோம் அப்படிக்கின்றி கையொன்று செய்ய, விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணுவதான வழிபாடு பயனற்றதாகும். மனத்தைப் பகவானைத் தவிர பிறிதொன்றிலும் சிதறவிடாமல் ஒடுக்கமுயலவேண்டும்.

பக்தி பூர்வமான விஷயங்களைச் சிந்தித்தால் நாம் பக்தர்களின் சுபாவத்தைப் பெறுவோமென்பது திண்ணம். மேலான ஞானிகளுடையவும், பக்திப் பெருக்கில் மூழ்கிய அன்பர்களுடையவும் ஹ்ருதயம் எப்பொழுதும் உன்னத நிலையிலேயே யிருக்கும். நாம் அவர்களது சேர்க்கையை நாடி அவர்களோடு பழகிவரின், அவர்போன்று எண்ணியும், செய்தும் வருதற்குச் சுலபமாகும். இதுபற்றியே சத்சங்கத்தின் பெருமையைப் பாராட்டுகின்றனர் பெரியோர்.

வழிபாடானது நம்மனத்தையும் எண்ணத்தையும் படிப்படியாக மேனிலைக்குக் கொண்டு வருகின்றது. அதனாலுண்டாகும் உணர்ச்சியைப் பக்தனாலன்றி அதே நிலையை அடையப் பெறாத வேறு எவராலும் அறியமுடியாது.



வாயால் வர்ணிக்கமுடியாத சுவை, பொறை, அன்புபோன்று இந்நிலையின் உணர்ச்சியையும் எடுத்துக் கூறுவதென்பது இயலாது. பக்தர்களின் குணத்தைப்பெற்ற ஒருவனே அவ்வுணர்ச்சியின் ருசியை யறிந்து போற்றுவான். எனவே விக்கிரக ஆராதனை முதலிய வழிபாட்டைப்பற்றிக் குறை கூறுவது அறியாமையாகும். விக்கிரகத்தை வழிபடுவோன் தன் இஷ்டதேவதையை அதனிற் கண்டு வணங்கிப் பாடித் துதித்து வழிபடுகின்றான். அப்பொழுது அவனது மனோநிலை என்ன உன்னதநிலையை அடைந்திருக்கவேண்டும்? இவ்வித வழிபாடு மிகவும் போற்றத்தக்க தன்றோ? இதனாலுண்டாகும் மனோசாந்தியை யுணரப் பெறாதவரே விக்கிரக ஆராதனையைத் தூற்றுவர்.

பக்தனுக்கு எப்பொழுதும் பகவானுடைய எண்ணமே முன்னிற்றல் வேண்டும். அங்ஙனமுண்டாதற்குச் சதாகாலம் அவனைப்பற்றியே ஸ்ரவணஞ்செய்தும், மனனஞ்செய்தும், அவன்மீதே தியானம் செய்தும், வருவது அவசியமாகும். இடைவிடா அப்பியாசத்தாலல்லாது இஃது எளிதில் ஏற்படுவதன்று. அடிக்கடி சாஸ்திரங்களின் :முறைப்படி விக்கிரக ஆராதனை செய்தல் இவ்வித அப்பியாசங்களில் ஒன்றாகும். ஆனால் நாம் இங்கு கவனிக்கவேண்டிய விஷயமொன்றிருக்கின்றது. இவ்வெளிப்படையான வழிபாடு உள்ளத் தழுக்கை யறுத்து மனத்தை உன்னத நிலையிற் சேர்க்கவேண்டும். இதுவே முக்கியமானதாகும். உடலழுக்கறுத்து வெளிப்படையாகப் பக்தனின் சின்னங்களனேக மணிந்துகொண்டு உள்ளத்தை ஏனைய விஷயங்கள் கொள்ளையிட விடுவது வழிபாடாகாது. வெளிச் சடங்குகள் யாவும் மனத்தைச் சீர்திருத்துவதற்கான கருவிகளே தவிர அவையே வழிபாட்டின் முடிவாகா. தூயமனத்தையும், தூய எண்ணங்களையும் உண்டுபண்ணினாலொழிய இவ்வெளித்தோற்றத்து ஆராதனை கிஞ்சித்தும் பயன்தராது. விக்கிரகங்கள் நமக்குப் பகவானை நினைப்பூட்டுஞ் சின்னங்களே யாவன. விக்கிரகங்களைப் பூசிக்கும் நாம் பகவானை நினைப்பூட்டும் சின்னங்களாக அவற்றை எண்ணுவதால் நமதிஷ்டதேவதையையே பூசித்தவர்களாகின்றோம். இதன் மூலமாய் நம் மனத்தைப் பகவானது எண்ணங்களால் நிரப்ப முயல்கின்றோம். எவ்வளவு அதிகமாகப் 'பகவானின் எண்ணங்கள் நம் முள்ளத்தில் பதிகின்றனவோ அவ்வளவு பிற எண்ணங்கள் நம் மனத்தை விட்டுப் புறக்கணிக்கப் படுகின்றன. இருட்டறையொன்றில் விளக்கைக் கொண்டுவந்தால் அந்தகாரம் தானாகவே அகன்றுவிடுகின்றது. அதை நாம் போவென்று கூறுகின்றோமில்லை. ஈஸ்வரன் தூய்மையிலும் தூய்மையானவன் என்று பெரியோர் சாஸ்திரங்கள்மூலம் முறையிடுகின்றன ரல்லவா? அத்தகையோனுடைய எண்ணங்கள் நிறையப்பெற்ற மனத்தின்கண் அசுத்தமான பிற எண்ணங்கள் எப்படி நிலைத்து நிற்கும்? இவ்விதமாகப் பிற எண்ணங்கள் முற்றிலும் ஒழிந்தபின் நம்மனம் பகவானிலே மூழ்கிவிடுகின்றது. அப்பொழுது நாம் பகவானில் ஐக்கியப்பட்டு அவரது நிலையை அடையப்பெற்று அவர் மயமாகின்றோம். இதுபற்றியன்றோ 'சித்தந்தெளிந்து சிவமானோர்' என்று தாயுமான ஸ்வாமிகளும், 'பிரம்மனை யறிந்தவன் பிரம்மனாய்விடுகின்றான்' என முக்காலமுணர்ந்த முனிசிரேஷ்டர்களும் கூறியிருக்கின்றனர். அந்நிலை அடையப் பெற்ற மகான்களுடைய' 'வாக்கு என்றும் பொன்னேபோல் போற்றப்பட்டுத் தேவவாக்கென யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும்

அநேக மகான்களும், பக்தர்களும் இவ்வழிபாட்டின் மூலமாகக் கடவுளைக்கண்டும் பேசியுமிருக்கின்றன ரென்பது நாம் கேள்விப்படாத நூதன விஷயமல்ல. மண்ணுருவத்தின் கண்ணே துரோணரைக் கண்டு ஏகலைவன் வில்வித்தைகளனைத்தையும் கற்றானென்றும், சிவலிங்கத்தின் கண்ணே சிவபெருமானைக் கண்டு அவரை வழிபட்டு, பக்தியில் ஒப்பற்ற கண்ணப்பர், ஆறுதினத்தில் முக்திப்பேற்றையடைந்தன ரெனவும் நம் புராணங்களில் எழுதப்பட்டிருக்கின்றன வல்லவா? ஏன் பண்டைக்காலத்திற்கு செல்வது? சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே இவ்விக்கிரக வழிபாட்டினால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உன்னத நிலையையடைந்தனரே! அவரால் அருளப்பட்ட மொழிகள் எவ்வளவு மேன்மையாக விளங்குகின்றன? இக்காலத்திலும் அநேகர் இவரைப் போன்ற பூசனை முதலிய செய்துவருகின்றனர். என்றாலும் இவர்கள் ஏன் அந்நிலையை அடையப்பெறுகின்றார்களில்லை? இவர்கள் செய்யும் முறைமை முற்றும் வெளி வேஷத்தோடே நின்று விடுகின்றது அல்லது இவர்கள் உலக விஷயங்களை யடையவேண்டுமென்னும் அவாவுடன் செய்பவர்களாயிருக்கலாம். உண்மையாக நாடுபவனுக்கு எதுவும் கிடைக்காமற்

போகாதென்பது இயற்கையின் விதியின் விதி. அப்படியிருக்க இவர்களும் அந்நிலையை அடையாததற்குக் காரணம் உண்மையாக இவர்கள் அபேக்ஷிக்கிறதில்லையென்பதே.

பக்தரை வழிபடுவோர் பகவானை வழிபட்டவராவர். பக்தனுக்கும் பகவானுக்கும் தாரதம்மியம் இல்லையென்பது பெரியோர் வாக்கு. அது பற்றித் தானே குலசேகர ஆழ்வாருக்குப் பெருமாள் என்ற பட்டத்தைத் தந்தனர்! பகவான் பக்தனுள்ளத்தில் என்றும் உறைந்திருத்தலினால் அவரது நிலையை அவனும் எய்தப்பெறுகின்றான்.

ஈஸ்வரன் அநந்தன், நித்தன், நிர்க்குணன், நிர்த்தொந்தன், நிஷ்களன்; ஆகவே மனோ வாக்குக் காயங்களுக் கெட்டாதவனாகின்றான். அத்தகையோனை புன்மக்களாகிய நாம் கையினால் தொழுது, வாயினால்பாடி, மனத்தினால் சிந்தித்து எப்படி வழிபட முடியும் என்றால், அத்தனைப்பெரும் வள்ளல் அநாதியும் அந்தமில்லாதவனாயுமிருப்பினும், பக்தர்களின் பக்தி வலைக்குள் சிக்கி உருவெடுத்துக் காக்ஷிகொடுக்கிறானென்பது உண்மை. உள்ளமுருகி அன்புடன் அழைக்கும் பக்தனுடைய குரலுக்கிரங்கி அவனைத் திருப்தி செய்தல் எல்லாம் வல்ல இறைவனாற் கூடாததொன்றோ? அகில அண்டங்களைச் சிருஷ்டித்து அவற்றை ஆட்டிவைக்கும் ஆண்டவனுக்கு இதைச் செய்வது அசாத்தியமாமோ?

மனத்தினால் மாத்திரம் பூசனை புரிவாருமுளர். இவர்கட்கு ஸ்நானபானாதிகளான ஆசாரங்களும், புஷ்பம் சந்தனாதி திரவியங்களைத் தேடித்திரியவேண்டிய அவசியமும் இல்லை. இவ்வித வழிபாட்டை மானஸ பூசையென்பர். பக்குவமற்ற சாதாரண மக்களுக்கு இஃது எளிதில் கூடுவதன்று. விக்கிரக வழிபாட்டாலோ அன்றி வேறெந்த வெளிச்சடங்குகளின் உதவியினாலோ மனத்தின் சலனத்தை அடக்கியவராயும், தூய சிந்தனையுள்ளவராயும் இருப்பவரால்தான் முடியும். இப்பூசனையில் பக்தன், "துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன், கர்ம துஷ்ட தேவதைகளில்லை, துரிய நிறை சாந்த தேவதையாமுனக்கே தொழும்பனன்பபிஷேகநீர், உள்ளுறையில் என்னாவி நைவேத்தியம், பிராணன் ஓங்குமதி தூபதீபம்; ஒருகால மன்றிது சதாகால பூசையாய் ஒப்புவித்தேன்" என்று தாயுமானவர் வழிபட்டதைப்போன்றும் "அன்பே தகளியாக, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியாய் நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு ஞானத்தமிழ் புரிந்த நான்" என்று ஆழ்வாராதிகளிலொருவர் கூறியதுபோன்றும் தன்னுடல் பொருளாவியனைத்தையும் பகவானை அர்ச்சிக்கும் திரவியங்களாகப் பாவிக்கின்றான். இம்மானஸ பூசையின் சிறப்பு கீழ்வரும் கதை ஒன்றால் நன்கு விளங்கும்.

ஒருகால் தன் தமையனாகிய பீமனைப்போன்று தான் நாஸ்திகனாயிராமல், ஸ்நான முதலியன செய்து சந்தனம், புஷ்பம், அர்க்கியம் முதலியன கொண்டு மகத்தான வைபவத்துடன் சிவபூசை செய்கின்றனனெனச் செருக்குற்றிருந்த காண்டீவனைக் கர்வபங்கம் செய்வதன் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அவனைக் கைலாயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குச் சென்றபோது, தேவகணங்கள் இவர்கள் வந்திருப்பதைக் கண்ணெடுத்துப் பாராமலே தங்கள் தோள்மேல் கூடைகூடையாகப் புஷ்பங்களைத் துரிதமாக எடுத்துச் செல்வதைக் கண்ணுற்றனர். அர்ச்சுனன் அவர்களை நோக்கி, 'ஏ! பூஜிதர்களே! இப்புஷ்பங்கள் ஏது? எங்கிருந்து எவ்விடம் கொண்டு போகின்றீர்கள்? என்று வினவினான். அதைக்கேட்ட தேவகணங்கள் சற்றே நின்று தாமதமாக விடையளித்தால் காலம் வீண்போம் என்றஞ்சினவைகளாய்ச் சுமையுடன் நடந்துகொண்டே பதிலளித்தன. "ஏ! மனிதனே! பூலோகத்தில் பீமன் என்ற அரசகுமாரனொருவனிருக்கின்றனன். அவனால் நேற்று அர்ச்சிக்கப்பட்ட புஷ்பங்கள் இவை, அவைகள் பகவானின் பாதங்களில் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்துவதற்கே எங்கள் தினத்தில் பாதி கழிந்துவிடுகின்றது" என்று கூறிவிட்டுப் பின்னும் துரிதமாக நடந்துவிட்டன. இதைச் செவியுற்ற பார்த்தன் திடுக்கிட்டு இஃதென்ன விபரீதமெனச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அக் கூட்டத்தின் நடுவே சிறிய கூடையொன்றில் புஷ்பம் சில ஏந்திவரும் சிவகணமொன்றைக் கண்டான். அதையும் அவ்வாறே கேட்க; அஃது அர்ச்சுனன் என்னும் பூலோக நரனால் அர்ச்சிக்கப்பட்டதென்று விளம்பிற்று. இதன் காரணத்தை அறியமுடியாத பார்த்தன் மண்ணுலகம் வந்ததும் மிகவும் பயபக்தியுடன் தன் தமையனை வணங்கி அவர் புரியும் பூசனை முறையை அறிவிக்கும்படி

(இதன் தொடர்ச்சி 80ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர், ஆசிரியர் மானேஜர்கள் சங்கங்களின் நடவடிக்கைகள்

## தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

### திருத்துறைப் பூண்டி.

இச்சங்கத்தின் கூட்டமொன்று மே மாதம் 13-ம் தேதி ஸ்ரீராம மடம் ஆரம்ப பாடசாலையில் கூடிற்று. அதுகாலை, சென்னை திரு. ஏ. ஆர். சேஷாசலம் செட்டியார் அவர்கள் "ஆரம்பாசிரியர்களும், தேசமுன்னேற்றமும்" என்ற தலைப்பில் ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் ஆசிரியர்கள் போதனாமுறைக் கலாசாலையில் பயின்ற அளவில் நின்றுவிடாமல், பத்திரிகைகளின் வாயிலாக தங்கள் உலகஞானத்தை விருத்திசெய்துகொண்டு, மேலும் மேலும் அறிவு புகட்டும் நூல்களை வாசித்துக்கொண்டே வரவேண்டுமென்றும், தங்களிடத்தில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு தேச உணர்ச்சியையும், தெய்வீகத்தன்மையையும், தைரியத்தையும், புகட்டும் வண்ணம் கல்விகற்பிக்கப்பட வேண்டுமென்றும், சென்னையில் நடந்த ஆரம்பாசிரியர்கள் மகா நாட்டைப்பற்றியும், அதில் நிறைவேறின தீர்மானங்களைப்பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

## ஆரம்பாசிரியர்கள் சங்கம்.

### ராசிபுரம் (சேலம் ஜில்லா)

இச்சங்கத்தின் கூட்டமொன்று ஜூன்மீ 10-ம் தேதி போர்ட் எலிமெண்டரி பாடசாலையில் கூடிற்று. ஏறக்குறைய சுமார் 50 உபாத்தியாயர்கள் விஜயம் செய்தனர். திரு, பி. வீரராகவன் அவர்கள் "ஆசிரியர்களும் ஆசிரியர் சங்கங்களும்" என்ற தலைப்பில் ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் "இச் சென்னை மாகாணத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர் சங்கங்கள் டிபார்ட் மெண்டாரால் நடத்தப்பட்டும் ஆசிரியர்களின் நிலைமை கல்வி விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் எள்ளளவேனும் உயர்த்தப்படவில்லையென்றும், இச் சங்கங்களில் அடிக்கடி, பல அறிஞர்களைக்கொண்டு, அந்நிய நாடுகளில், கல்வி யெவ்வாறு போதிக்கப்படுகின்றன வென்பதையும், நமது தாய்நாட்டில் பூர்வீகத்தில் எவ்விதம் மக்களுக்கு, தீவிரமாக கல்வி போதிக்கப்பட்டுவந்ததென்பதைப்பற்றியும், தற்போது கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை எவ்விதம் சீர்திருத்தப்பட வேண்டுமென்பதைப்பற்றி, ஆசிரியர்கள் அடிக்கடி நன்றாக விவாதித்து தங்களையும் தாங்கள் வசிக்கும் ஆரம்பக் கல்வி உலகத்தையும் சீர்திருத்த வேண்டுவது அவர்களது முக்கிய கடமையென்றும் கூறினார். அக்கிராசனர் முடிவுரையுடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

## சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

5-6-33 தேதி—

இச் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திரு, ராவ் ஸாஹிப் இராஜமாணிக்கம் பண்டாரம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மாலை 4-மணிக்கு ஓர் கூட்டம் சேலம் டௌனில் கூடியது. அக்கூட்டத்தில் சேலம் முனிசிபாலிடியார், செவ்வாய்ப்பேட்டையில் அங்காளம்மன் கோவில் தெருவிலுள்ள இராஜ ராஜேஸ்வரி ஆரம்ப பாடசாலைக்கு போட்டியாக, முனிசிபல் பாடசாலைவைக்க ஏற்பாடு செய்வது அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஜி. ஓ. நெ. 2223 '(1-12-26) லா யெடுகேஷன்; நெம்பர் 580 (12-4-1927) உத்திரவுகளுக்கு மீறி நடப்பதாகுமென்றும், திரு எல். பி. வீரராகவாச்சாரியர் அவர்களால் எடுத்துக்கூறப்பட்டு இது விஷயமாக ஓர் தீர்மானம் செய்து முனிசிபல் சேர்மனுக்கும், கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் அனுப்புவதாக தீர்மானித்து, கூட்டம் கலைந்தது.

### சென்னை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

(24-6-33)—

இச் சங்கத்தின் பொதுக்கூட்ட மொன்று, எம். சபாபதி செட்டியார் ஆரம்ப பாடசாலையில், திரு, டி. இ. வரதாச்சாரியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. திரு, கே. இராமானுஜம் பிள்ளை யவர்கள், தற்போது சேர்குலைந்திருக்கும் சென்னை ஜில்லா கல்விச் சபையைப்பற்றியும், கோ ஆப ரேடிவ் ஸொஸைடியை ஸ்தாபிக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார் பிறகு மேற்கூறிய ஸொஸைடிக்கு வேண்டிய சட்ட திட்டங்களை ஏற்படுத்த ஒரு கமிட்டி ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

### தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டமொன்று திருவாரூர் விஜய புரத்தில் கூடியது. அக்கூட்டத்திற்கு சென்னை திரு. டி. இ. வரதாச்சாரியார் அவர்களும், திரு. வ. ஆர். சேஷாசலம் செட்டியார வர்களும் விஜயம் செய்தனர். அக்கூட்டத்தில் கூடிய சீக்கிரத்தில் வேதாரண்யத்தில் தஞ்சை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு கூட்டப்படவேண்டுமென்றும், அதற்கொரு வரவேர்ப்பு கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி அக்கூட்டம் கலைந்தது.

### போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்

### 20—6—33

12-6-33

திரு. டி. எம். ஜம்புலிங்க முதலியார் அவர்கள் தென்னார் காடு ஜில்லா கல்விச் சபை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

20-6-33

திரு. ஜி ஜகன்னாத ருஜுகாரு அவர்கள் விசாகபட்டணம் ஜில்லாக் கல்விச் சபைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜில்லா கல்வி அதிகாரிகள் மாறுதல்கள்.

வட ஆற்காடு ஜில்லா கல்வி அதிகாரியாகிய திரு. வி. இராகவாச்சாரியார் அவர்கள் செங்கல்பட்டு கல்வியதிகாரியாக மாற்றப்பட்டார். ஜுலை 1-ம்தேதி வேலையை ஒப்புக்கொள்வார் திரு. கே. எஸ். அப்பாசாமி ஐய்யர். (டி. இ. ஒ) மேற்கு கோதாவரி ஜாவிலிருந்து வந்ததும் திருநெல்வேலி ஜில்லா கல்வியதிகாரியாக வேலை பார்ப்பார்.

திரு. கே. வி. இராமன் மினன் (டி. இ. ஒ) திருநெல்வேலி, மேற்கு கோதாவரி ஜில்லாக் கல்வி அதிகாரியாக மாற்றப்பட்டார்.

### 27—6—33

23-6-33

கிருஷ்ணா ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கத்திலிருந்து திருவாளர்கள். கெ. வெங்கடரமணய்யா அவர்களும் டி. லக்ஷமணய்யா அவர்களும் ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

(78ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டி நின்றான். அதன்மேல் பீமன், தான் ஸ்நானம் செய்யும்போது ஒவ்வொரு நாளும் விடாது ஐந்து நிமிஷம் நீரில் மூழ்கிய வண்ணம் மானஸ பூசை செய்துவருவதாகக் கூறினான். இதன் பிறகு அர்ச்சுனன் தன் அண்ணனைப் போற்றி அவர்போன்றே தானும் மானஸ பூசை செய்யலுற்றான்.

---

[74-ம் பக்கத் றொடர்ச்சி]

கள் அமைந்தவர்களாயினும் கல்வியறிவும் கேள்வி நலமும் அடைவார்களாயின் அவர்களால் ஆடவர்கள் அடையும் பெரும்சுகமும் லாபமும் ஆறுதலும் செல்வமும் இவ்வளவென்று மதிக்க எவரால் முடியும்? கண்களானது தனக்குள்படரும் செவ்வரிகளைத் தாமறியாதவாறு போலக்குடும்பத் தலைவன் நெருங்கிப் பழகு முறையினால் தனக்கு வாய்த்த மனைவியின் கல்வி கேள்வி யின்மையினால் உண்டாகும் திறமைக் குறைவுகளைத்தான் காணமுடியாமல் ஏமாற்றமடைவதோ அல்லது அதுவே போதுமெனத்திருப்தி யடைவதோ (வேறு விதியின்மையால்) உலகில் எங்கும் இயல்பே ஆதலின் இவைகளை ஓர் சமாதானமாகக் கொள்ளாமல் மாதர்களைக் கல்வியறிவில் முற்படுத்தி அவர்களால் பெரும் இலாபங்களைப் பெறல் இன்றியமையாக் கடமையென்றெவரும் ஒரு மனதாய் எண்ணித் துணிய வேண்டும்.



(2) கல்விசம்மந்தமான வரியும் கவர்ன்மெண்டார் செய்யும் திரவியசகாயமும்.

34. கல்விச் சம்மந்தமான வரிகள்.
35. இன்னவிதத்தின்படி வரிகள் விதித்து வசூல்செய்யவேண்டுமென்பது.
36. வரிகள் விதிப்பதும் அவைகளை வசூலிப்பதும்.
37. மூலாதாரக் கல்விசம்மந்தமான நிதிக்கு கவர்ன்மெண்டார் திரவியசகாயம் செய்வது.

(3) பட்ஜெட்டும் த[illegible]ிக்கையும்.

38. மூலாதாரக் கல்விசம்பந்தமான நிதியைக்குறித்த பட்ஜெட்.
39. மூலாதாரக் கல்விசம்மந்தமான நிதியின் கணக்குகளைத் தணிக்கைசெய்வது.

(4) நிவாரணைப்பகுதி.

40. நிவாரணைப் பகுதி.

## 4-ம் அத்தியாயம்.

### மூலாதார பாடசாலைகள்

(1) அங்கீகாரம்.

41. மூலாதார பாடசாலைகளை அங்கீகரிப்பது.

(2) க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத்தொகைகள்.

42. சொந்த மூலாதார பாடசாலைகளுக்கு திரவியசகாயத்தொகை கொடுப்பது.

43. திரவிய சகாயம் பெறும் பாடசாலையின் மானேஜர் நிர்ணயிக்கப்பட்ட ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளைச் சவுதறிக்கவேண்டுமென்பது.

## 5-ம் அத்தியாயம்.

### கட்டாயமான மூலாதாரக் கல்வி

(4) கட்டாயப்படுத்தும் நிபந்தனை ஏற்படுத்துவது.

44. பிரதேச அதிகார சபையார் கல்வியைக் கட்டாயமாக்கத் தீர்மானிக்கலாமென்பது.

45. பிரதேச அதிகாரசபையார் தங்களுடைய தீர்மானத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்பது.

46. பிரதேச கவர்மென்டாரால் தீர்மானம் அங்கீகரிக்கப்படுவதைப் பிரசித்தப்படுத்த வேண்டுமென்பது.

47. 46-வது பிரிவின்படி பிரசித்தம் செய்யப்பட்ட விஸ்தீரணத்திலுள்ள மூலாதார பாடசாலைகளின் சம்பளம் வாங்கக்கூடாதென்பது.

(1) நிவாரணைகள்.

48. யாதொரு நபரையாவது யாதொரு வகுப்பைச்சேர்ந்த நபர்களையாவது நிவாரணை செய்ய அதிகாரம்.

11. சபையின் நிதியிலிருந்து மெம்பர்கள் பிரதிபலன் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாவார்களென்பது,
12. சபை சட்டப்படி சேர்ந்ததாவது.

(2) வேலைநடத்துகிற விதம்.

13. சபையார் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்பது.
14. கேட்டுக்கொள்வதன்மேல் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது கூட்டம் கூட்டவேண்டுமென்பது.
15. கூட்டத்தில் இன்னார் அக்கிராசனம் வகிக்கலாமென்பது.
16. கூட்டங்கள் பகிரங்கமாயிருக்கவேண்டுமென்பது.
17. கூட்டங்களில் க்வோரமும் நடவடிக்கை நடத்தும் முறையும்.
18. நடவடிக்கைக் குறிப்புகள்,
19. ப்ரெஸிடென்டின் நிர்வாக அதிகாரங்களும், அவர் அவைகளைப் பிரித்துக் கொடுப்பதும், அந்த உத்தியோகம் காலியாயிருக்கும்போது அவைகள் நிறைவேற்றப்படுவதும்.
20. வேலை நடக்கேறுவதைக் குறித்த நிலையான உத்தரவுகள்.
21. நடத்தப்படும் நடவடிக்கையை நிறுத்திவைக்க பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.
22. தவறிப்போகும் விஷயங்களில் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரங்கள்.
23. சபையைப் புனர்நிர்மாணம் செய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

(3) ஜில்லாக் கல்விச்சபைகளின் அலுவல்கள்.

24. சபையின் அலுவல்கள்,
25. சொந்த மூலாதார பாடசாலைகளுக்குச் செய்யப்படும் கிரமபசாயத்தைப் பற்றிய விவரங்களை சபையார் அனுப்பவேண்டுமென்பது.
26. நிர்ணயிக்கப்பட்ட இதர ரிபோர்ட்டுகளை சபையார் சமர்ப்பிக்கவேண்டுமென்பது.
27. சிப்பந்திகளை அமர்த்திக்கொள்வது.

(4) நிதியும், பட்ஜெட்டும் (வரவு செலவு திட்டமும்), தணிக்கையும்

28. சபையின் நிதியில் என்னென்ன சேருமென்பது.
29. நிதியை எவ்விடத்தில் கட்டிவைக்க வேண்டுமென்பதும் எப்படி அதிலிருந்து தொகைகள் வாங்கவேண்டுமென்பதும்.
30. வரவைப்பற்றியும் செலவைப்பற்றியும் பட்ஜெட்டை சபையார் பிரதேச கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டுமென்பது.
31. சபையின் கணக்குகளைத் தணிக்கை செய்வது.

## 3-ம் அத்தியாயம்.

### மூலாதாரக் கல்வி சம்மந்தமான நிதி.

(1) அதன் அமைப்பும் மேல்விசாரணையும்.

32. மூலாதாரக் கல்வி சம்மந்தமான நிதி.
33. கல்விசம்மந்தமான நிதியை இன்ன இடத்தில் கட்டிவைத்திருக்கவேண்டுமென்பதும் அதிலிருந்து இன்னவிதமாய்ப் பணம் வாங்கவேண்டுமென்பதும்.

# உலக விநோதங்கள்.

1. உலகத்திலேயே உயர்ந்தமலை நமது இந்தியாவில் ஹிமாசலத்திலுள்ள எவரஸ்ட்டு மலையாம். அது சுமார் 29,141 அடிகள் உயரம் இருக்கின்றது.

*   *   *

2 உலகத்திலுள்ள நீண்ட நதி தென் அமெரிக்காவிலுள்ள அமேசான் நதி. அது 4000 மைல்கள் நீளம் இருக்கின்றது.

*   *   *

3 உலகத்திலுள்ள உயர்ந்த நீர் வீழ்ச்சி நியூ ஜிலாந்திலுள்ள "சுதர்லண்ட்" நீர் வீழ்ச்சி. அது சுமார் 1248 அடி உயரத்திலிருந்து விழுகின்றது.

*   *   *

4. அதிக ஆழத்தில் விழும் நீர் வீழ்ச்சி பிரிட்டிஷ் கயானாவிலுள்ள "கெய்தூர்" நீர் வீழ்ச்சி. அது சுமார் 741 அடி ஆழத்தில் விழுகின்றது.

*   *   *

5. உலகத்திலுள்ள பெரிய பாலைவனம் ஆபிரிகா தேசத்திலுள்ள "சகாரா" பாலைவனம். அதனுடைய பரப்பு ஏறக்குறைய ஐரோப்பா அவ்வளவு இருக்கின்றதாம்.

*   *   *

6. உலகத்திலுள்ள நீண்ட கால்வாய் எகிப்திலுள்ள சூயெஸ் கால்வாய் அதன் நீளம் சுமார் 100 மைல்கள் இருக்கின்றது.

*   *   *

7. உலகத்திலுள்ள பெரிய நகரம் லண்டன் மாநகரம். அதில் 8,747,143. ஜனங்கள் அதாவது கிரேட் பிரிட்டனிலுள்ள ஜனத்துகையில் 6-ல் ஒரு பங்கு அப்பட்டணத்தில் வசிக்கின்றார்கள்.

*   *   *

8. உலகத்திலுள்ள நீண்டபாலம், ஸ்காட்லண்டிலுள்ள "தே" என்னும் பெயருடைய பாலம். அதன் நீளம் 2-மைல்.

*   *   *

9. உலகத்திலுள்ள பெரிய நந்தவனம் அமெரிகாவிலுள்ள "நேஷனல் பார்க்கு" அதன் விஸ்தீரணம்சுமார் 3350 சதுரமைல்கள்.

*   *   *

உலகத்தில் சற்றேறக்குறைய 3400 பாஷைகள் பேசப்படுகின்றனவாம்.

மனிதர்களுடைய இருகால்களும் ஒரே அளவோடு இருப்பதில்லையாம்.

சப்தமானது ஒரு விநாடிக்கு 1100 அடிகள் விதம் செல்லுகின்றதாம்.

*   *   *

அமெரிகா தேசத்திலுள்ள பெட் போர்ட் என்ற பட்டிணத்தில் ஒரு கோழி சதுரமான முட்டை இட்டதாம்.

*   *   *

உலகத்திலுள்ள பறவை யினங்களில் உயரமான பறவை ஆஸ்டிரிச் (நெருப்புக் கோழி) என்னும் ஒருவித பறவை. அது சுமார் 8 அடி உயரங்கூட இருக்கின்றதாம்.

*   *   *

உலகத்தில் கண்களுக்கு புலப்பட்ட மட்டில் 5 லட்சம் பலவித ஜீவ ஜந்துக்கள் இருக்கின்றனவாம்.

*   *   *

ஒரு பலம் தேனைச் சேர்ப்பதற்கு ஒரு தேனீயானது சுமார் 50000 பூக்களுக்குச் செல்ல வேண்டுமாம்.

*   *   *

வங்க தேசத்தில் 6-வருடங்களுக்குள் சுமார் 8501 வேங்கைகள் கொல்லப்பட்டனவாம்.

*   *   *

உலகத்தில் ஒரு வருடத்தில் சுமார் 650 டன் பொன் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றவாம்.

*   *   *

மகா சமுத்திரங்களில் பெரியதான பசுபிக் மகா சமுத்திரம் பரப்பு சுமார் 63,986000 சதுர மைல்களாம்.

*   *   *

இடியின் சப்தம் 20 மைல்கள் வரையில் கேட்குமாம்.

*   *   *

பாம்புகள் 2 வருடங்கள் வரையிலுங்கூட ஒன்றுமே தின்னாமல் ஜீவித்திருக்குமாம்.

*   *   *

ஒரு கப்பலானது ஒரு நாளைக்கு 437 மைல்கள் செல்லுமாம்.

*   *

எல்லா உலோகங்களி[illegible] னது பிளாடினம் என[illegible]ருவித உலோகமாம்.

190342

(3) சம்ரக்ஷகர்களின் பொறுப்பு.

49. பாடசாலைக்குப் போகும் வயதுள்ள குழந்தையைப் பாடசாலையில் ஹாஜராகும்படிச் செய்ய சம்ரக்ஷகருக்குள்ள பொறுப்பு.

(4) ஹாஜர் கம்மிட்டிகள்.

51. ஹாஜர் கம்மிட்டிகளை நியமிப்பது.

52. குழந்தையைப் பாடசாலையில் ஹாஜராயிருக்கும்படி செய்யத் தவறிப்போனால், மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பிராது கொடுப்பது.

## 6-ம் அத்தியாயம்.

மதபோதனை

53. (தனி நபர்களின்) சொந்த நிர்வாகத்திலிருக்கும் பாடசாலைகளில் மதபோதனை நடக்கும்போது சிறுவர்கள் இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிற விஷயங்களிலே மூலாதாரபாடசாலைகளை ஏற்படுத்துவதற்காகப் பிரதேச அதிகாரசபையாருடன் ஜில்லா கல்விச் சபையார் ஏற்பாடுசெய்யவேண்டுமென்பது.

54. மதபோதனை கட்டாயமாய்ச் செய்விக்கப்படும் அங்கீகாரமான பாடசாலைகள் க்ராண்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயம் பெற தகுதியுள்ளவையாகுமென்பது.

## 7-ம் அத்தியாயம்.

பலவகைப் பட்டவை

55. தாலூகா போர்டுகள் இல்லாத இடங்களில் ஜில்லாபோர்டார் பிரவர்த்திக்க வேண்டுமென்பது.

56. விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

# 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து மூலாதாரக்கல்வியைக்குறித்த ஆக்ட்.

**பீடிகை**

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் மூலாதார (எலிமென்டரி) கல்விக்காக இன்னும் நன்றாய் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

## 1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்

**பெயர்**

1. இந்த ஆக்டை, 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து மூலாதாரக் கல்வியைக் குறித்த ஆக்ட் என்று சொல்லலாம்.

**வியாபகமும் செலாவணியாகத் தொடங்குவதும்**

2. இது-ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் விளம்பரமூலமாய்க் கட்டளையிடக்கூடிய விஸ்தீரணங்களிலும் தேதிகளிலும் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

**அர்த்தம்.**

3. இந்த ஆக்டில், சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—



**'ஹாஜராவது'**

1. யாதொரு பாடசாலையில் 'ஹாஜராவது' என்பது - வருஷத்தில் எத்தனை தினங்களும் எந்தெந்த தினங்களிலும் (ஹாஜராகவேண்டுமென்று) நிர்ணயிக்கப்படக்கூடுமோ அத்தனை தினங்களும் அந்தந்த தினங்களிலும், ஹாஜராகும் ஒவ்வொரு தினத்திலும் நிர்ணயிக்கப்படக்கூடிய காலம் அல்லது காலங்களிலும் யாதொரு மூலாதார பாடசாலையில் பாடம் கேட்பதற்காக ஹாஜராவது என்று அர்த்தமாகும்;

**'வித்தியா விசாரணைத் தலைவர்', பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர்', 'பாடசாலைகளின் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர்.**

2. '(டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்) வித்தியாவிசாரணைத் தலைவர்,' 'பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர்', 'பாடசாலைகளின் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர்', என்பவை - முறையே வித்தியா விசாரணைத்தலைவர், பாடசாலைகளின் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஆகிய இவர்களின் அலுவல்களைச் செய்ய ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் நியமிக்கப்படக்கூடிய உத்தியோகஸ்தர் அல்லது உத்தியோகஸ்தர்கள் என்று அர்த்தமாகும்;

**'ஜில்லா'**

3. 'ஜில்லா' என்பது - ரெவினியு பரிபாலன சம்மந்தமான காரியங்களுக்காக யாதொரு ஜில்லா கலெக்டரின் விசாரணையிலிருக்கும் அல்லது இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக ஜில்லாவென்று பிரசித்தம் செய்யக்கூடிய யாதொரு பிரதேச விஸ்தீரணம் என்று அர்த்தமாகும்;

**'ஜில்லா போர்ட்'**

(4) 'ஜில்லா போர்ட்' என்பது-1884-ம்௵த்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு ஜில்லா போர்ட் என்று அர்த்தமாகும்.

**'மூலாதாரக் கல்வி'**

(5) 'மூலாதாரக் கல்வி' என்பது - நிர்ணயிக்கப்படக்கூடிய பாடங்களிலும் பரிமாணம்வரையிலும் போதிக்கப்படும் கல்வி என்று அர்த்தமாகும்;

**'மூலாதார பாடசாலை'**

(6) 'மூலாதார பாடசாலை' என்பது-41-வது பிரிவின்படி மூலாதார பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்ட யாதொரு பாடசாலை அல்லது யாதொரு பாடசாலையின் பிரிவு என்று அர்த்தமாகும்;

**'மூலாதார பாடசாலை**

(7) 'மூலாதார பாடசாலை இடம்' என்பது - பாடசாலைக்குப் போகக்கூடிய வயதுள்ள ஒரு குழந்தைக்கு அவசியமென்று நிர்ணயிக்கப்படக்கூடிய வசதி இடம், மூஸ்தீதுகள் என்று அர்த்தமாகும்;

**'சம்ரட்சகர்'**

(8) '(கார்டியன்) சம்ரட்சகர்' என்பது-யாதொரு குழந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பாகிலும் வளர்க்கும் பொறுப்பாகிலும தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் பொறுப்பாகிலும் சட்டப்படியாவது இயற்கை பாத்தியதையினாலாவது அங்கீகாரமான வழக்கப்படியாவது யாரைச் சேருகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபரென்றோ, யாதொரு குழந்தையைப் பாதுகாக்கவாகிலும் வளர்க்கவாகிலும் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கவாகிலும், ஒப்புக்கொண்டிருக்கிற அல்லது ஏற்றுக்கொண்டிருக்கிற யாதொரு நபரென்றோ, சட்டப்படியான யாதொரு அதிகாரியால் யாருக்கு யாதொரு குழந்தையைப் பாதுகாக்கும் அல்லது தம் வசத்தில் வைததுக்கொண்டிருக்கும் பொறுப்பு ஒப்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபரென்றோ அர்த்தமாகும்.

**பிரதேச அதிகார சபை**

9. 'பிரதேச அதிகார சபை' என்பது - யாதொரு முனிசிபல் கௌன்சில் அல்லது தாலூகா போர்ட் என்று அர்த்தமாகும்.

'முனிசிபல் கௌன்ஸில்', 'முனிஸிபாலிடி'

10. 'முனிசிபல் கௌன்ஸில்', 'முனிசிபாலிடி' என்பவை - முறையே 1920 - ம௵த்திய சென்னப்பட்டணத்து டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகளாக்டுக்காவது, 1919௵த்திய சென்னை ராஜதானிப் பட்டணத்து முனிசிபல் ஆக்டுக்காவது உட்பட்ட யாதொரு முனிஸிபல் கௌன்ஸில் என்றும் யாதொரு முனிசிபாலிடி என்றும் அர்த்தமாகும்;

'நிர்ணயிக்கப்பட்ட'

11. 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - இந்த ஆக்டின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் செய்யப்படும் விதிகளால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்;

'ஸர்க்கார் நிர்வாகம் தனி' நபர்களின் சொந்த நிர்வாகம்'

(11) 'ஸர்க்கார் நிர்வாகம்' என்பது-யாதொரு மூலாதார பாடசாலை சம்மந்தமாய் உபயோகிக்கப்படும்போது, கவர்ன்மென்டாராலாவது யாதொரு பிரதேச அதிகாரசபையாராலாவது நிர்வாகம் செய்யப்படுவது என்று அர்த்தமாகும்; மற்ற சகல நிர்வாகமும்-'தனி நபர்களால் சொந்தத்தில் நிர்வாகம்' செய்யப்படுவதாகக் கருதப்படும்;

'பாடசாலைக்குப் போகும் வயது.'

(12) 'பாடசாலைக்குப் போகும் வயது' என்பது-யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திலுள்ள அல்லது குறித்த யாதொரு வகுப்பைச்சேர்ந்த ஆண் குழந்தைகள் விஷயமாகவும் பெண்குழந்தைகள் விஷயமாகவும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் நிர்ணயிக்கக்கூடிய வயதென்று அர்த்தமாகும்;

'தாலூகா போர்ட்'

(13) 'தாலூகா போர்ட்' என்பது - 1884-ம௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு தாலூகா போர்ட் என்று அர்த்தமாகும்.

## 2 ம் அத்தியாயம்.

### ஜில்லா கல்விச் சபைகள்

#### (1) அவைகளின் அமைப்பு.

ஜில்லா கல்விச் சபை.

4. இந்த ஆக்ட் அமுலுக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒருப்ரெஸிடெண்டும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியையுள்ள மெம்பர்களும் சேர்ந்த ஜில்லா கல்விச் சபை ஒன்று ஏற்படுத்தப்படும்.

சபையின் அமைப்பு.

5. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-ஜில்லா கல்விச் சபையின் மெம்பர்களில் ஒருவரை அந்தச் சபையின் ப்ரெஸிடென்டாக இருக்கும்படி நியமிக்கலாம்; அல்லது, விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, நிர்ணயிக்கப்படக்கூடிய மாதிரியாகவும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களின் அங்கீகாரத்துக்குட்பட்டும், அந்தச் சபையின் மெம்பர்களிலிருந்தே அதன் ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி அந்தச் சபைக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

ஆனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, அந்த அதிகாரத்தை ரத்துசெய்துவிடலாம்; ஆனால், அவர் - எந்தக் காரணங்களைக் கொண்டு அந்தப்படி ரத்துசெய்ய உத்தேசிக்கப்படுகிறதோ அந்தக் காரணங்களை ஜில்லா கல்விச் சபைக்கு முன்னதாய்த் தெரிவித்தபிறகும், அந்தச் சபையார் எவையேனும் சமாதானங்களையும் ஆட்சேபனைகளையும் தெரிவித்திருந்தால் அவைகளைப்பற்றி ஆலோசித்தபிறகும் அந்தப்படி செய்யவேண்டும்.



(2) ஜில்லா கலெக்டரானவர் - உத்தியோக முறைமையில் ஜில்லா கல்விச் சபையின் மெம்பராயிருப்பார்.

இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு ஜில்லாவில் யாதொரு ரெவினியு ஜில்லாவின் பாகம் மாத்திரமேயாவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ரெவினியு ஜில்லாக்கள் முழுவதுமாவது அவைகளின் பாகங்களாவது அடங்கியிருந்தால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-இந்தப் பிரிவின் காரியங்களுக்காக இன்ன உத்தியோகஸ்தரை ஜில்லா கலெக்டராக எண்ணவேண்டுமென்று பிரசித்தஞ்செய்யலாம்.

(3) பாடசாலைகளின் எந்த இன்ஸ்பெக்டர் எந்த அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஆகிய இவர்களின் அதிகாரவரம்புக்குள் மேற்படி ஜில்லா இருக்கிறதோ அந்த இன்ஸ்பெக்டரும் அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டரும் உத்தியோகமுறமையில் ஜில்லா கல்விச் சபையின் மெம்பர்களாவார்கள்.

(4) ஜில்லா கலெக்டரானவர் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டாயிருந்தால், டிஸ்ட்ரிக்ட் போர்டார் - ஜில்லா கல்விச் சபையில் தங்களுக்குப் பிரதிநிதிகளாயிருக்கும்படி இரண்டு நபர்களைத் தெரிந்தெடுக்க அர்ஹராவார்கள்.

ஜில்லா கலெக்டர் ப்ரெஸிடென்டாயிராவிட்டால், ப்ரெஸிடென்டானவர் - உத்தியோக முறைமையில் ஜில்லா கல்விச் சபையின் மெம்பராவார்; மேலும், டிஸ்ட்ரிக்ட் போர்டார் - மேற்படி சபைக்கு இன்னொரு பிரதிநிதியைத் தெரிந்தெடுக்க அர்ஹராவார்கள்.

(5) ஜில்லாவுக்குள்ளிருக்கிற ஒவ்வொரு பிரதேச அதிகார சபையாரும் - ஜில்லா கல்விச் சபையில் தங்களுக்காக பிரதிநிதித்துவம் வகிக்கும்படி நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியையுள்ள நபர்களைத் தெரிந்தெடுக்க அர்ஹராவார்கள்.

(6) ஜில்லா கல்விச் சபையின் இதர மெம்பர்கள் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் நியமிக்கப்படுவார்கள்; மேற்படி கவர்னரவர்கள் - அந்தப்படி நியமிக்கும்போது, மஹம்மதியர்கள் முதலிய சிறுவகுப்பார்களுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படும் விஷயத்தைக் கவனிக்கவேண்டும்;

ஆனால், மூலாதார பாடசாலைகளைப் பராமரித்துவரும் ஸர்க்காரைச் சேராத கல்வி விஷயமான யாதொரு சங்கத்தார் அல்லது மூலாதார பாடசாலைகளின் மானேஜர்கள் சேர்ந்த யாதொரு கூட்டத்தார் மேற்படி சபையில் தங்களுக்குப் பிரதிநிதிகளாயிருக்கும்படி ஒருவரையாவது பலரையாவது தெரிந்தெடுக்க அந்த சங்கம் அல்லது கூட்டத்துக்கு விளம்பர மூலமாய் உத்தரவு கொடுக்க ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு அதிகாரம் உண்டு.

(7) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் நேமகஞ் செய்யப்படும் மெம்பர்களின் சங்கியையானது - உத்தியோக முறைமையில் மெம்பராயிருப்பவர்கள் நீங்கலாக மெம்பர்களின் மொத்த சங்கியையில் காலில் ஒரு பங்குக்கு அதிகப்படக்கூடாது.

சபையின் வைஸ் ப்ரஸிடென்ட்.

6. ஜில்லா கல்விச் சபையார் தங்களுக்குள் ஒருவரை அந்தச் சபையின் வைஸ் ப்ரெஸிடென்டாயிருக்கும்படி தெரிந்தெடுக்கலாம்.

தெரிந்தெடுப்பதையும் நியமிப்பதையும் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யவேண்டுமென்பது.

(7) யாதொரு ஜில்லா கல்விச் சபையின் ஒவ்வொரு ப்ரெஸிடென்டையும் வைஸ் ப்ரெஸிடென்டையும் மெம்பரையும் தெரிந்தெடுப்பதையும் நியமிப்பதையும் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கேஜேட்டில் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

சபை மெம்பர்கள் உத்தியோகம் வகிக்கும் கால அளவு.

8. (1) 10-வது பிரிவில்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு ஜில்லா கல்விச் சபையின் மெம்பராயிருக்கும்படி நியமிக்கப்பட்ட அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் - அவரை நியமித்திருக்கும் அல்லது தெரிந்தெடுத்திருக்கும் விஷயம் பிரசித்தஞ்செய்யப்பட்டுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கேஜேட்டின் தேதியிலிருந்து மூன்று வருஷம் உத்தியோகத்தில் இருக்கவேண்டும்.

(2) யாதொரு ஜில்லா கல்விச் சபையின் ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டானவர் - தாம் மெம்பராயிருக்கும் கால அளவு கழிந்துபோவதன்மேல் தம்முடைய உத்தியோகத்தைக் காலிசெய்து விட்டவராகக் கருதப்படுவார்.

*சபையின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பர் உத்தியோகத்தை ராஜிநாமா செய்வது*

9. [1] யாதொரு ஜில்லா கல்விச் சபையின் மெம்பராகவாவது வைஸ் ப்ரெஸிடென்டாகவாவது நியமிக்கப்பட்ட அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு நபர் - தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யப்போவதாக ப்ரெஸிடென்டுக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து அந்தப்படி ராஜிநாமா செய்யலாம்; ப்ரெஸிடென்டானவர்-சபையாருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்.

2. கவர்ன்மெண்டாரின்கீழ் சம்பளமுள்ள உத்தியோகத்தை வகிக்கும் யாதொரு நபர் ஜில்லா கல்விச் சபையில் மெம்பராயிருந்தால், அவர் - எந்த பிரதேச விஸ்தீரணத்தின் விஷயமாய் அந்த சபைக்கு அதிகாரம் இருக்கிறதோ அந்த விஸ்தீர்ணத்தில் மூன்று மாதகாலத்துக்கு அதிகமாக இராமற்போகும் உத்தேசத்துடன் அதை விட்டுப்போவதன்மேலாவது, கவர்ன்மென்டாரின் கீழ் தாம் வகிக்கும் உத்தியோகத்தை ராஜிநாமா செய்வதன்மேலாவது. அதிலிருந்து அவர் சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கப்படுவதன் மேலாவது, நீக்கிவிடப்படுவதன்மேலாவது, பென்ஷன் முதலியவை பெற்று விலகிக்கொள்வதன் மேலாவது அந்த சபையில் தம்முடைய மெம்பர் உத்தியோகத்தைக் காலிசெய்து விட்டவராகக் கருதப்படுவார்.

*சபையின் ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பரை நீக்கிவிடுவது*

10. [1] ஜில்லா கல்விச் சபையின் யாதொரு ப்ரெஸிடென்ட், வைஸ் பிரஸிடென்ட் அல்லது மெம்பரானவர்:—

1. அவர் சபையின் அதிகாரப்பிரதேசத்தைவிட்டு மூன்றுமாதத்துக்கு மேற்பட்டு வெளியேபோயிருந்தாலும், பிரவர்த்திக்க மறுத்தாலும், பிரவர்த்திக்க அசமர்த்தராய்விட்டாலும் அவர் தீர்க்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கப்பட்டாலும், யாதொரு ஜில்லா கல்விச் சபையின் ப்ரெஸிடென்ட், வைஸ் பிரஸிடென்ட் அல்லது மெம்பராயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்கும் யோக்கியதைக் குறைவைக் காட்டுகிறதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அபிப்பிராயபடுகிற யாதொரு குற்றத்தைச் செய்து குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் மேலே கண்டபடி அபிப்பிராயப்படுகிற யாதொரு உத்தரவுக்கு க்ரிமினல் [குற்றவிசாரணை] கோர்ட்டாரால் உட்படுத்தப்பட்டாலும்.

2. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களின் அபிப்பிராயப்படி போதுமான காரணமில்லாமல் தொடர்ச்சியாய் சபையின் இரண்டுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்கு வராமலிருந்தாலும்.

ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக அவரை நீக்கிவிடலாம்.

3. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - அந்தப்படி நீக்கிவிடப்பட்ட யாதொரு நபர் இன்ன [illegible]க்குள் மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது தகுதியானவர்களென்று ஒரு கால அளவை நிஷ்கரிவை செய்யலாம்.

120342

[தொடரும்]


# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு 0 2 6

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. எ. எல். டி. இயற்றியது.

## கலைமகள் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு விலை | அணா | 3 | வி. வீரராகவன், எம். எ. இயற்றியவை. |
| மூன்றாம் வகுப்பு | ,, | 4 | |
| நான்காம் வகுப்பு | ,, | 5 | |
| ஐந்தாம் வகுப்பு | ,, | 6 | |

## கலைமகள் கதாவாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை | 0 | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் விலை | 0 | 3 | 0 |

## கலைமகள் கணித நூல்

| | | | |
|---|---|---|---|
| 1 வது புத்தகம் (1, 2, வகுப்பு) | அணா | 5 | எஸ். தருமலிங்க நாயக்கர். |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) | ,, | 6 | |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) | ,, | 8 | |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு) | ,, | 9 | |

## நீதிக்கட்டுரைக் கோவை

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | அணா | 4 | வி. ஞானதிக்கம், பி. எ. எல். டி. |
| இரண்டாம் புத்தகம் | ,, | 7 | |
| கலைமகள் நீதிக்கதைகள் | ,, | 4 | |

## இந்துதேச சித்திர சரித்திரக் கதைகள்

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | அணா | 4 | டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். எ., எல் டி. |
| இரண்டாம் புத்தகம் | ,, | 5 | |
| வட ஆற்காடு பூகோளம் | அணா | 4 | எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி எ., எல். டி. எம். ஆர். எ.எஸ். |
| செங்கற்பட்டு பூகோளம் | ,, | 5 | |

## பாலர் கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | அணா | 5 | எம். எஸ் சுந்தரேஸ்வரன், [illegible], எல். டி. |
| இரண்டாம் புத்தகம் | ,, | 6 | |
| மூன்றாம் புத்தகம் | ,, | 7 | |
| நான்காம் புத்தகம் | ,, | 8 | |
| ஐந்தாம் புத்தகம் | ,, | 9 | |

| | | | |
|---|---|---|---|
| கந்தபுராண வெண்பா—வெண்பாப்புலி வேலுசாமிப் பிள்ளை | 4 | 0 | 0 |
| வாழ்க்கைச் சரிதை ... ... | 0 | 4 | 0 |
| உலக அதிசயங்கள் ... ... | 0 | 4 | 0 |
| முப்பெரும் புலவர் ... ... | 0 | 4 | 0 |
| தமிழ் இலக்கண வினாவிடை ... ... | 0 | 4 | 0 |
| இந்துஸ்தானத்து வீரர்கள்—எஸ். எஸ். அருணகிரிநாதர்... | 0 | 5 | 0 |
| விசித்திர விளக்கு—தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை | 0 | 6 | 0 |
| பெஞ்சமின் பிராங்க்லின்—பண்டிதர்-பக்கிரிசாமி செட்டியார் | 0 | 6 | 0 |

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி. கெ. 2, சின்ன லேன் பீச், ஜார்ஜ் டவுன், மதறாஸ்.

# எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கபட்டவை.)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்[illegible]
[illegible]லோன், பர்மா, துரைத்தனத்தார் அங்கீகாரம்செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்க[illegible]
வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் [illegible]
வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

| | எ. எம். எஸ். இராகவன் பி. ஏ., எல். டி., எழுதியவை. | | ரூ. | அ. | [illegible] |
|---|---|---|---|---|---|
| 1. | கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் | .... | 0 | 2 | [illegible] |
| 2. | கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் | .... | 0 | 3 | [illegible] |
| 3. | கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் | .... | 0 | 4 | [illegible] |
| 4. | கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் | .... | 0 | 4 | [illegible] |
| 5. | கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் | .... | 0 | 6 | [illegible] |
| | புதிய புஸ்தகங்கள். | | | | |
| 6. | கோபால் புதிய தமிழ்வாசகம் நெ. 6. வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை | | 0 | 7 | [illegible] |
| 7. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 7. ,, | .... | 0 | 8 | [illegible] |
| 8. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 8. ,, | .... | 0 | 9 | [illegible] |
| 9. | உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி. கார்டன் முகவுரையுடன் | .... | 0 | 3 | [illegible] |
| 10. | ,, புஸ்தகம் 2. ,, | .... | 0 | 4 | [illegible] |
| 11. | ,, புஸ்தகம் 3. ,, | .... | 0 | 5 | [illegible] |
| 12. | தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் | .... | 0 | 4 | [illegible] |
| 13. | தினசரி கணக்கு புஸ்தகம் 2. ,, | .... | 0 | 5 | [illegible] |
| 14. | தினசரி கணக்கு புஸ்தகம் 3. ,, | .... | 0 | 5 | [illegible] |
| 15. | சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் (அச்சில்) | .... | 0 | 6 | [illegible] |
| 16. | சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது. (இ. வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) | .... | 0 | 5 | [illegible] |
| 17. | சிறுமணிக் கதைகள்—என். எஸ். அருணகிரி நாதர் | .... | 0 | 5 | [illegible] |
| 18. | கம்பர் அல்லது கவியரசு—பண்டிதர் ஆ. நா. கன்னையா | .... | 0 | 5 | [illegible] |
| 19. | தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை—பண்டிதர் கா. ரா. கோவிந்த ராஜ முதலியார் | .... | 0 | 4 | [illegible] |
| 20 | சிறுவர் இந்துதேச சரித்திரம்—வி. ஜயராம அய்யர் பி. எ., பி. எல். | .... | 0 | 5 | [illegible] |
| 21. | ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம்—முதற் புஸ்தகம் எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. எ., எல். டி. | .... | 0 | 5 | [illegible] |
| 22. | ஸிவிக்ஸ் இரண்டாம் புஸ்தகம் ,, | .... | 0 | 6 | [illegible] |
| 23. | கோபால் வாய்பாடு | .... | 0 | 1 | [illegible] |
| 24 | [illegible]க்க சோழன்—பண்டிதர் ஆர். சாம்பசிவ சர்மா | .... | 0 | 12 | [illegible] |
| 25 | புத்திமானே பலவா[illegible] — [illegible]சுராமையர் எழுதியது. | .... | 0 | 10 | [illegible] |
| 26. | கிருஷ்ண தேவராயர்—கெ. பி. சேஷாத்திரி ஐயங்கார் | .... | 0 | 8 | [illegible] |
| 27. | பகீரதன்—பண்டிதர் ஆ. நா. கன்னையா | .... | 0 | 6 | [illegible] |
| 28. | பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன்—வித்வான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை | .... | 0 | 6 | [illegible] |
| 29. | துருவன் அல்லது விடா முயற்சியே வெற்றிக்குவழி—ஷெயார் | .... | 0 | 6 | [illegible] |
| 30. | வமாங்கதத்நிளவரசன்—டி. என். சேஷாசலம், பி. ஏ., பி. எல். | .... | 1 | 4 | [illegible] |

புஸ்தக வியாபாரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தக்க கமிஷன் தரப்படும்.
புஸ்தக விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். உடனே எழுதவும்.

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி.**
புஸ்தக வியாபாரிகள்,
ஜார்ஜ் டவுன், சென்னை.